training to effectively use AI tools and interpret the data they generate. Additionally, many rural areas lack the reliable internet connectivity necessary for these systems to function efficiently. Data privacy also remains a pressing issue, with concerns surrounding who owns the data collected by AI technologies and how it is being used. Overcoming these challenges will require coordinated efforts from governments, technology companies, non-governmental organizations, and the broader farming community.

**AI for Sustainable Agriculture**

Sustainability is a key goal of modern agriculture, and AI can play a central role in achieving it. By helping farmers use fewer resources more efficiently, AI contributes to the reduction of greenhouse gas emissions, soil degradation, and water wastage.

Moreover, AI can aid in the development of climate-resilient crops by analyzing genetic data and environmental conditions to identify traits that improve resistance to drought, pests, or disease.

AI's role in promoting sustainable agriculture is both powerful and multifaceted. One of its most significant contributions is the reduction of agriculture's carbon footprint. By enabling more efficient use of inputs such as water, fertilizers, and fuel, AI minimizes resource waste and lowers greenhouse gas emissions. For instance, AI-guided precision farming reduces the overuse of chemical inputs and optimizes machinery use, leading to less pollution and energy consumption.

In addition, AI supports the development of more resilient farming systems. Through predictive analytics, machine learning, and climate modelling, AI helps farmers anticipate and adapt to extreme weather events, pest outbreaks, and changing environmental conditions. This foresight enables them to adopt preventive strategies, adjust planting schedules, or choose crop varieties better suited to future climates, thus enhancing food security in a warming world.

Moreover, AI contributes to the protection of biodiversity by promoting practices that reduce ecological disruption. With data-driven insights, farmers can minimize land degradation, avoid unnecessary deforestation, and reduce the use of harmful agrochemicals. AI can also help identify and monitor diverse plant and animal species, supporting conservation efforts and maintaining healthy ecosystems essential to long-term agricultural sustainability.

**The Future of AI in Agriculture**

As AI technology continues to advance, its role in agriculture will only grow, leading to more intelligent, responsive, and efficient food systems. One exciting area of future development is the integration of AI with blockchain technology to enhance transparency and traceability in food supply chains. This combination will allow every step of a product's journey—from farm to fork—to be recorded and verified, helping to prevent fraud, ensure food safety, and build consumer trust. Another promising innovation lies in AI-driven breeding programs. By analyzing large volumes of genetic and phenotypic data, AI can help scientists and farmers develop new crop varieties with superior traits such as higher yields, disease resistance, and adaptability to climate stress. This approach accelerates the breeding cycle and supports the development of resilient crops tailored to specific environments and market needs.

Furthermore, AI is set to bring greater personalization to agriculture through hyperlocal data analytics. Farmers will receive highly specific recommendations based on their exact location, soil conditions, microclimate, and crop history. This level of precision will allow for better decision-making, optimized input use, and improved productivity at the individual farm level. These advancements represent just a glimpse of what AI can offer to the future of agriculture. However, to fully realize this potential, it is essential to ensure that these technologies are accessible, ethical, and inclusive for all farming communities. However, this transformation must

be inclusive and ethical, ensuring that farmers of all sizes and regions benefit from these technological advancements.

AI has the potential to revolutionize how we produce food, making agriculture more efficient, sustainable, and resilient. However, this transformation must be inclusive and ethical, ensuring that farmers of all sizes and regions benefit from these technological advancements.

**Conclusion**

Artificial Intelligence is no longer a distant concept reserved for tech giants and research labs; it is already at work in our fields, helping farmers produce more food with fewer resources. From soil to shelf, AI is making agriculture smarter, greener, and more responsive to the challenges of the 21st century. As consumers, policymakers, and global citizens, it is our collective responsibility to advocate for and enable the responsible development and adoption of AI in agriculture. By doing so, we are not only improving farming practices but also securing the future of food for generations to come.

The seeds of tomorrow are being planted today, and with the guidance of Artificial Intelligence, the harvest promises to be abundant, equitable, and sustainable. Artificial Intelligence is not a distant concept reserved for tech giants and research labs; it is already in our fields, helping farmers grow more food with fewer resources. From soil to shelf, AI is making agriculture smarter, greener, and more responsive to the challenges of the 21st century. As consumers, policymakers, and citizens, we must support the responsible development and adoption of AI in agriculture. By doing so, we are not just enhancing farming practices we are securing the future of food for generations to come. The seeds of the future are being sown today, and with the help of Artificial Intelligence, the harvest promises to be abundant, equitable, and sustainable.

## References

Javaid, M., Haleem, A., Khan, I. H., & Suman, R. (2023). Understanding the potential applications of Artificial Intelligence in Agriculture Sector. *Advanced Agrochem*, 2 (1), 15-30.

Jha, K., Doshi, A., Patel, P., Shah, M., (2019). A comprehensive review on automation in agriculture using artificial intelligence. *Artificial Intelligence in Agriculture*, 2 (1), 1-12.

Bannerjee, G., Sarkar, U., Das, S., Ghosh, I. (2018). Artificial Intelligence in Agriculture: A Literature Survey. *International Journal of Scientific Research in Computer Science Applications and Management*, 7 (3), 1–6.

García, L., Parra, L., Jimenez, J. M., Lloret, J., & Lorenz, P. (2020). IoT-based smart irrigation systems: An overview on the recent trends on sensors and IoT systems for irrigation in precision agriculture. *Sensors*, 20(4), 1042.



# ஆட்டம் தொடரும்

பேராசிரியர். பாரதி கென்னடி
முகாமைத்துவத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

குமரேசனும் முரளியும் குழந்தைப் பருவ நண்பர்கள். அயல் வீடுகளில் வசித்து வந்தனர். இருவருக்கும் ஒரே வயதுதான். ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்து வரும் இவர்கள் இருவருக்கும் ஒரே பொழுதுபோக்கு. சதுரங்கம் என்னும் செஸ் விளையாட்டை அவர்கள் விளையாடுபவர்கள். மைண்ட் கேம் இல் இது மிகவும் முக்கியமானது என்பது அவர்களின் பெற்றோரின் நம்பிக்கை என்பதாலும் இருவரும் வீட்டிலேயே இருந்து விளையாடுவதினால் அவர்கள் இதனை விளையாடுவதற்கு எந்த வித தடையையும் விதிப்பதே இல்லை. பாடசாலை சதுரங்க குழுவிலும் இவர்கள் பங்கேற்று இருக்கிறார்கள். அவ்வப்போது இருவரும் ஒன்றிணைந்து இதனை விளையாடுவார்கள். குமரேசன் முரளி வீட்டுக்கு போவான் அல்லது முரளி குமரேசன் வீட்டுக்குப் போவான்.

அன்றும் அப்படித்தான். குமரேசன் வீட்டுக்கு முரளி சென்றிருந்தான். குமரேசன் முரளியிடம், செஸ் விளையாட்டை விளையாடுவோமாடா, கொஞ்சம் ஃப்ரீயாக டைம் இருக்கு அல்லவா என்று கேட்டான். ஆனால் இப்பவே இரவு 7 மணி ஆகிவிட்டதே, விளையாடி முடிக்காதுவிட்டால் என்ன செய்வது? என்றான் முரளி. முடிக்காது விட்டால் அப்படியே நிற்பாட்டி வைத்துவிட்டு நாளைக்கு தொடர்வோமே! என்றான் குமரேசன். முரளியும் உடன்பட்டான். இருவரும் விளையாடத் தொடங்கினார்கள். குமரேசனின் கட்டில்தான் அவர்களின் விளையாட்டுத்தளம். இருவரும் அமர்ந்தார்கள், விளையாடத் தொடங்கினார்கள். இருவருக்கும் தத்தமக்குப் பிடித்த அல்லது தமக்கு ‘லக்’ என்று கருதும் நிறத்தினை எடுத்துக் கொள்வதற்காக முரளி வெள்ளைக்காய் ஒன்றையும் கறுப்புக்காய் ஒன்றையும் கைக்குள் வைத்துக்கொண்டு குமரேசனுக்கு முன்னால் கைகளைப் பொத்தி பிடித்து நீட்டினான். குமரேசன் வலது கையை பிடித்து விரித்தான். அதனுள் கறுப்புக்காய் இருந்தது. குமரேசன் முகம் சுளித்தாலும் ஏற்றுக்கொண்டு தன் பக்கம் கறுப்புக்காய்களை எடுத்து வைத்தான். முரளியும் தயாரானான். அனைத்து செஸ் காய்களும் எடுக்கப்பட்டன.

ஏழு மணி பத்து நிமிடங்களில் செஸ் விளையாட்டு ஆரம்பமாயிற்று. நடுவில் ராஜா ராணி. அவர்களுக்கு அருகில் இரு பக்கங்களிலும் பிஷப், நைட் காசில் போன்ற காய்களையும் முன்வரிசையில் சோல்ஜர்ஸ்களை அடுக்கி விளையாட்டை ஆரம்பித்தார்கள் இருவரும். முரளி முதலாவதாக சோல்ஜஸ்களில் ஒரு காயை நகர்த்த ஆரம்பித்தான் குமரேசனும் அவ்வாறே செய்தான். முரளி பிஷப்பை முன்னோக்கி எடுத்தான். குமரேசன் மற்றும் ஒரு

காலாட்படையின் ஒரு காயை முன்னெடுத்தான். முரளி நைட்டை வெளியில் தூக்கி வைத்தான். முன்னுக்கு இருந்த குமரேசன் தன் ராணியை நகர்த்தி செக் என்றான். அருகில் இருந்த பிஷப் பிராணியை வெட்டியது. அதேவேளை கறுப்பு பிஷப் அங்கிருந்து நகர்ந்து வந்து வெள்ளையின் அரணில் புகுந்தது. இவ்வாறு ஆட்டம் களைகட்டியது. ஒவ்வொரு கட்டத்திலும் அதியுயர் பெறுமதி வாய்ந்த காய்கள் இரு பக்கத்திலும் வெட்டுக்கு உள்ளாகின.

ஆட்டம் இரவு 9 மணி வரை சென்று கொண்டிருந்தது. சதுரங்கம் சதுரங்க அட்டைக்கு வெளியில் கட்டிலில் ஒரு பக்கத்தில் குமரேசனின் பக்கம் வெள்ளைக்காய்களும் முரளியின் பக்கம் சதுரங்க அட்டைக்கு வெளியில் கறுப்புக்காய்களும் குவிக்கப்பட்டன. "ஒன்பது மணி ஆயிற்று வீட்டுக்கு வெளிக்கிடவில்லையா முரளி? அம்மா தேடப் போகிறாரே?" என்று கூறிக்கொண்டு குமரேசனின் தாய் வந்தார். "கொஞ்சம் பொறுங்கள் அன்ரி! விளையாட்டு சூடு பிடிச்சிற்று, யாருக்கு வெற்றி என்று பார்த்திற்று வாரன் அன்ரி!" என்றான் முரளி. கறுப்புக்காய்களும் வெள்ளைக்காய்களும் பொதுவில் அனைத்து காய்களும் வெட்டப்பட்டு கறுப்பு ராஜாவும் வெள்ளை ராஜாவும் அவர்களுடன் இரண்டு கறுப்பு சோல்ஜர்களும் ஒரு வெள்ளைக் சோல்ஜருமாக மொத்தத்தில் ஐந்து காய்களை தவிர அனைத்து காய்களும் வெட்டப்பட்டு காணப்பட்டன. கறுப்பு சோல்ஜர்படையில் ஒற்றை ராணியாக அந்தஸ்து கொடுக்க மிகவும் கறுப்புக் சோல்ஜர் படையினில் ஒருவரை ஒற்றை ராணியாக அந்தஸ்து கொடுக்க மிகவும் உயர்ந்து கொண்டிருந்தான் குமரேசன். "மகன் எழும்புங்க, சாப்பிடுங்க, நாளைக்கு ஸ்கூலுக்கு போகணும். 10 ஆம் ஆண்டு என்றாலும் அடுத்த வருடம் ஓ லெவல். படிக்கோணுமல்லவா" என்றார் அம்மா, குமரேசனின் தாய், இருவரும் அந்த சதுரங்க அட்டையை அப்படியே வைத்துவிட்டு எழுந்து சென்றார்கள். குமரேசனின் அறை அது என்றாலும் குமரேசன் அவனுடைய கட்டிலில் நித்திரை செய்வதில்லை. நிலத்தில் தான் படுப்பான். சாப்பிட்டுவிட்டு வந்து அவன் தன்னுடைய நிலத்தில் நித்திரையாகிப் போனான்.

சதுரங்க அட்டையின் வெளியில் இருந்த வெள்ளைக்காய்களும் கறுப்புக்காய்களும் ஒன்றையொன்று முறைத்துப் பார்த்தன. நேரம் சென்று கொண்டிருந்தது. அப்போது இரவு 11.30, கறுப்பு ராணி தன் நைட்கள், பிஷப்ஸ், காசில் மற்றும் போன்களிடம், "நான் ராணியாக எவ்வாறு வெள்ளைப்படையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று போராடினேன் அரசனை காப்பாற்ற வேண்டும் என்று துடித்தேன் என்னை வெள்ளைப்போன் ஒன்று வெட்டி விட்டது. தனிமையில் நின்றேன். ஒவ்வொருவரும் நீங்கள் அவ்வாறுதான் என்னுடன் வந்து சேர்ந்தீர்கள்" என்றது. அதற்கு பிஷப், ஆமாம் தாயே! ஆனால் இப்போது எனக்கு மிக மிக கவலையாகவே இருக்கிறது. நீங்கள் இருந்த இடத்தில்

இப்போது இன்னும் ஒருவரை வைத்து பார்க்க வேண்டும் என்று நம் ராஜா முனைப்பாக இருக்கிறார். பாருங்கள், நாளை குமரேசன் முரளியும் வெளியே வரும்போது, மீண்டும் விளையாடத் தொடங்கும் போது நம் ராஜா அந்த சோல்ஜர் படையில் ஒருத்தரை ராணியாக்கி விடுவார். நமக்கு இது பெரிய அவமானம் இல்லையா அம்மா! என்று கேட்டது. கறுப்பு நைட்றும் அதனை ஆமோதித்தது. நானும் எப்படி எல்லாம் பாய்ந்து பாய்ந்து வெட்டினேன், வெள்ளை பிஷப்பும் வெள்ளை காசில், ஐந்து சோல்ஜஸ்கள் அத்தனையும் நான் தானே வெட்டினேன், எனக்கு என்ன செய்தார் நம்முடைய ராஜா? என்றது. காசிலும் உடனே குறுக்கிட்டது "நான்தான் கறுப்பு ராணியை வெட்டினேன். ஆனால் என்னையே பலி கொடுத்து விட்டாரே இந்த ராஜா, நன்றி இல்லாதவர்" என்றது. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சோல்ஜஸ்களையும், என்னையும் ஒரு ராணியாக ப்ரமோட் பண்ணி இருக்கலாமே, என்னைத் தடுத்தார். மற்ற சோல்ஜஸ்களை ப்ரோமோட் பண்ணுகிறார் என்றது.

இவ்வாறு கறுப்பு இராணியின் தலைமையில் ஒரு குழுவே உருவாகத் தொடங்கியது. தங்களுக்கு இழைக்கப்பட்டிருந்த, இழைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் அலசி ஆராய்ந்து கொண்டு மிகவும் மன வேதனைக்குள்ளாகிக் கொண்டிருந்தன. கறுப்பு ராணி உடன் என்னுடன் இருந்த பிஷப், காசில், சோல்ஜர்ஸ் அனைவரிடமும் கேட்டார் நாம் என்ன பாவம் செய்தோம். இன்று வெட்டுப்பட்டு இந்த சதுரங்க அட்டைக்கு வெளியே ஒரு தனியான ஒரு குழுவாக நின்று கொண்டிருக்கின்றோம். சதுரங்க அட்டையினுள் ராஜாவும் ராஜாவுடன் சேர்ந்த அந்த இருவரும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நாளை வெற்றி கிடைக்கப் போகிறது. மீண்டும் அரசைக் கைப்பற்றப் போகிறார்கள். வெள்ளைக் காய்களை வெட்டப் போகிறார்கள், முறியடிக்கப் போகிறார்கள். ஆனால் நமக்கு என்ன இதனால் நன்மை கிடைக்கப் போகின்றது? என்று அந்த கறுப்பு ராணி அறைகூவிக் கொண்டிருக்கின்ற பொழுது, இதனை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தது வெள்ளை சோல்ஜர் ஒன்று.

வெள்ளை சோல்ஜர், இந்த விடயத்தை உடனடியாக கொண்டு சென்று வெள்ளை ராணியிடம் ஒப்புவித்தது. வெள்ளை ராணியும் ஒருகணம் இந்த விடயங்களை எல்லாம் தனக்குள் யோசித்து அதனை ஆய்வுசெய்து கொண்டிருந்தார். தொடர்ந்து தன்னுடனிருந்த பிஷப்களையும் சோல்ஜர்ஸ்களையும் நைற்றையும் கூப்பிட்டு நமது நிலைமையும் எதிர்த்தரப்பில் இருக்கக்கூடிய அந்த கறுப்புக் காய்களின் நிலைமையும் ஒன்றுதானே! பாருங்கள், நாமும் அவ்வாறுதானே நம்முடைய ராஜாவைக் காப்பாற்ற வேண்டும், ராஜாவினுடைய அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இன்று நாமே வெட்டப்பட்ட நிலையே வெளித்தள்ளப்பட்டிருக்கின்றோம், வெளியேற்றப்பட்டு இருக்கின்றோம். ஆனால் அங்கே வெள்ளை ராஜா தன்னுடைய சோல்ஜர் ஒருவரை

இந்த ராணிக்கு நிகராக மாற்ற வேண்டும் என்பதில் மிகவும் துடிப்புடன் இருக்கின்றார். மாற்றிவிட்டால் உடனடியாக வெள்ளைக் காய்களையும் கறுப்புக் காய்களையும் கறுப்பு ராஜாவையும் அவர் பிடித்து விடுவார், அவருடைய அரசாங்கத்தினைப் பிடித்து விடுவார், பிடித்து விட்டால் ஒரே குஷிதான், மீண்டுமாக தன்னுடைய அரசாங்கத்தை மிக மிகச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று வெள்ளை ராஜாவுக்கும் தலைக்கனம் ஏறும். அவரும் செய்வார் ஆனால் நம்முடைய நிலைமை என்ன? அந்த அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக எங்களுடைய ராஜாவை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நாம் ஒவ்வொருவருமே இந்த ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றோம். எமக்குக் கிடைத்த கடைசிப் பரிசு இதுதானே! என்று ஒரு பெரிய பிரசங்கத்தையே வைத்தது அந்த வெள்ளைராணி. உடனிருந்த அனைத்து வெள்ளை காய்களும் அதனை மிகவும் ஆராய்ச்சி நோக்குடன் எண்ணிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று வெள்ளை பிஷப்புக்கு ஏதோ தோன்றியது. “ராணி! நாங்கள் ஏன் போய் அந்த வெள்ளை ராணியுடன் சமரசம் பேசக்கூடாது? வெள்ளை ராஜாவுக்கும் கறுப்பு ராஜாவுக்கும் வெள்ளை ராஜாவின் அரசாங்கத்திற்கும் கறுப்பு ராஜாவின் அரசாங்கத்திற்கும் இடையில் தானே இந்த போட்டி? நமக்கும் வெள்ளை ராணிக்கும் கறுப்பு ராணிக்கும் என்ன போட்டி? இருவருமே ஒரே விதமாக வெட்டப்பட்டு, தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு இருக்கின்றோம். இன்று இரவிரவாக நாங்கள் இவர்களுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும், நாளை தான் இந்த இருவருக்குமான முடிவு தெரிய வேண்டும், அதுவரைக்கும் நாங்கள் இரவிரவாக கண்விழித்து இந்த துக்கத்திலும் துன்பத்திலும் ஏன் உழல வேண்டும்? எங்களுக்கிடையில் ஒரு பரஸ்பரம், ஒரு புரிந்துணர்வு ஏன் நாங்கள் செய்ய முடியாது? வாருங்கள் ராணி! நாங்கள் போய் கறுப்பு ராணியுடன் ஒரு உடன்படிக்கை செய்வோம் அல்லது நட்புறவு ஒன்றை ஏற்படுத்துவோம்” என்றது. இந்த யோசனை சரியாகத்தான் நைட்டுக்கும் பட்டது. நைட்டும் அதை ஆமோதித்தது. தொடர்ந்து அங்கிருந்த சோல்ஜர்சும் ஆமோதித்தன. வெள்ளை ராணியின் தரப்பிலிருந்து ஓரிரு கூக்குரல்கள் கறுப்பு ராணியின் காதில் எட்டும் அளவிற்கு ஏற்படுத்தப்பட்டன.

கறுப்பு ராணியும் வெள்ளை ராணியினுடைய அந்த குரலுக்கு செவி சாய்த்து, என்ன எப்படி இருக்கிறீங்க? என்றவாறு ஒரு சமரசமான பேச்சு வார்த்தையை தொடங்கின. வெள்ளை ராணியும் கறுப்பு ராணியும் ஒன்றாக இணைந்து ஒரு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றபொழுது அவர்களுக்கு கிடைத்த ஒரு முடிவு, இருவருமே எங்களுடைய படை அணியுடன் தூக்கி எறியப்பட்டிருக்கின்றோம், வெளியேற்றப்பட்டு இருக்கின்றோம். ஆட்டத்தில் இருந்து நிறைவுறுத்தப்பட்டிருக்கின்றோம். ஆனால் எங்களுக்கு அடிப்படையில் கிடைத்தது, எங்களுக்கான தோல்வி அல்ல. எங்களுடன்தான்

*ஒரு பெரிய குழுவே இருக்கிறது. இந்த குழுவை வைத்துக்கொண்டு நாங்கள் ஏன் மாற்றத்தை செய்யக்கூடாது? நாங்கள் ஏன் எங்களுக்கான ஒரு புதிய முடிவை ஏற்படுத்தக் கூடாது? நாளை தெரியப்போகின்றது வெள்ளை ராஜாவா கறுப்பு ராஜாவா வெல்லப் போகின்றார்கள் என்று. ஆனால் நாங்கள் ஏன் அந்த முடிவை இன்று இந்த இரவு எடுக்கக்கூடாது? எங்களுடைய ராஜாவுக்காக நாங்கள் அத்தனை வேதனைகளையும் தாங்கி, பார்த்த அவ்வளவு வேலைகளையும் தாண்டி எங்கள் அனைவரையும் இந்த அரசாங்கத்திலிருந்து வெளியேற்றி இருக்கின்றார். ஆகவே நாங்கள் ஏன் இந்த அரசாங்கத்திற்காக இவர்களுடைய வெற்றியைப் பார்க்க வேண்டும் என்பதற்காக நாங்கள் ஏன் ஒன்றாக இணைந்து அதனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? இதைவிட புதிதாக, வேகமாக வேறான முடிவொன்றை நாங்கள் எடுக்க முடியாதா? என்கின்ற அளவிற்கு இந்த கறுப்பு ராணி வெள்ளை ராணியின் தலைமையிலான குழு கூட்டத்தைக் கூட்டியது. கூட்டத்தில் பலவிதமான கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன. பலவிதமான கேள்விகள் எழுப்பப்பட்டன. பலவிதமான முரண்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இப்பொழுது இரவு 3:00 மணி. நேரம் போய்க் கொண்டிருக்கின்றது. மறுநாள் காலை உதயமாகிக் கொண்டிருக்கின்றது. அனைவரும் ஒரு கண்ணுக்கு தூங்கி எழும்பி இருந்தார்கள். என்ன நாங்கள் செய்ய இருக்கின்ற அந்த மாற்றம்? என்ன வேகம்? என்ன விவேகம்? என்ன மாற்றம்? இதற்கான பதில்களை நாங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்! வெள்ளை காய்கள் ஒவ்வொன்றும் கறுப்புக் காய்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே யோசிக்கத் தொடங்கின. இறுதியில் அனைவரும் ஒன்றாக இணைந்து அந்த சதுரங்க அட்டையின் பக்கத்தில் போய் ஒரு குழுமமாக இணைந்து கூப்பிட்டன. ''ராஜாக்களே!''*

*ராஜாக்களும் நிமிர்ந்து பார்த்தனர். ''என்ன இருவரும் ஒன்றாக சேர்ந்து வந்திருக்கிறீர்கள்?'' இது கறுப்பு ராஜாவினுடைய குரல். ''ஆஹா! வெளியில் போனவுடன் நீங்கள் அனைவரும் ஒன்றாகி விட்டீர்கள் போல! உங்களுக்குள் ஒரு பெரிய உடன்பாடு வந்து விட்டதா!'' இது வெள்ளை ராஜாவின் குரல். வெளியில் இருந்த அத்தனை காய்களும், ''எங்களை வெட்டி வீழ்த்தி வெளியில் தள்ளிவிட்டு நீங்கள் மட்டும் நாளை ராஜாவாகப் போகின்றீர்களா? உங்களுக்கு மட்டும் நாளை ஒரு பெரிய ராஜ்யம் வரப்போகின்றதா? நீங்கள் புதியதான ஒரு உலகை படைக்கப் போகின்றீர்களா?'' என்று கேள்வியின் மேற்கு கேள்விகளை ஒருவித கேலியாக ஏற்படுத்தின.*

*இதைத்தொடர்ந்து அந்த அத்தனை காய்களும் அந்த அட்டவணையை சுற்றிக்கொண்டனர். ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு அந்த அட்டையை ஆட்டின. அதிலிருந்த அத்தனை காய்களும் விழுந்தன. கறுப்பு ராஜாவும் வெள்ளை ராஜாவும் விழுந்தார்கள்,*

உருண்டார்கள். அந்த அட்டைக்கு வெளியில் வந்தார்கள். ஒரு வெள்ளைக்காய் நிமிர்ந்து நின்றது. ஒரு கறுப்பு காயும் உருண்டு விழுந்தது. அனைத்து காய்களின் முகங்களிலும் பெரிய சந்தோஷம். மாற்றத்தைக் கொண்டு வந்து விட்டோம். இந்த மாற்றம் எங்களுக்கு விதைக்கப்பட்ட அநியாயத்திற்காக நாங்கள் எழுப்பிய குரல், கூக்குரல் கேட்கப்பட்டது. பிரபஞ்சம் எங்களை ஆசீர்வதித்திருக்கின்றது. மாற்றத்தை நாங்கள் கொணர்ந்திருக்கிறோம் என்று மகிழ்ச்சியில் ஆழ்ந்து போக, விடியற்காலையிலேயே குமரேசன் வீட்டை நோக்கி ஓடி வந்தான் முரளி. பார்த்தாயா நான் சொன்னேனே, விளையாட்டை முடித்துவிட்டு போகலாம் என்று. நீதானே சொன்னாய், நாளை தொடர்வோம் என்று. பார்! எல்லாக் காய்களையும் நீ விழுத்தி வைத்திருக்கிறாயே! இப்ப எப்படி நாங்கள் ஒரு முடிவுக்கு வருவது? என்றான் முரளி. குமரேசன் எழுந்து கண்களைக் கசக்கியவனாக, அப்படியா! நான் இப்பதானே பார்க்கிறேன்! ஓ! எல்லாக் காய்களும் விழுந்துதான் கிடக்கின்றன என்றான். இருவருமே கைகளைக் குலுக்கிக் கொண்டு, வெளிக்கிடு, கெதியாக ஸ்கூலுக்கு போக வேண்டும். இன்றைக்கு முதலாம் பாட வேளைக்கு கண்டிப்பாக ரீச்சர் வரமாட்டார். நாங்க சந்தோஷமாக இருந்து அங்கும் செஸ் விளையாடலாம் என்று சொல்லியவனாக முரளி தன்னுடைய வீட்டை நோக்கி ஓடினான். குமரேசன் தன்னுடைய பாடசாலைக்கு செல்வதற்காக கிளம்பி விட்டான்.



# மத்தியகால வரலாற்றைக் கட்டமைப்பதில் நிலாவெளிச் சாசனத்தின் வகிபங்கு

திருமதி. கிறிஸ்டினா நிரோஜினி மோசஸ்ரூபன்
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிமுகம்

கிழக்கிலங்கையின் மத்திய கால வரலாற்றைக் கட்டமைப்பதில் நிலாவெளிச் சாசனத்திற்கு முக்கிய பங்குண்டு. திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் இச்சாசனம் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளிக் கிராமத்தில் நிலாவெளி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் காணப்படுகின்றது (8.678426,81.194285). பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த நிலாவெளிக் கல்வெட்டின் முதற் பகுதி அழிந்துவிட்டமையால் அது எழுதப்பட்ட காலத்தின் அரசனின் பெயரை அறிய முடியவில்லை. ஆயினும் கல்வெட்டின் எழுத்தமைவைக் கொண்டு பதினொராம் நூற்றாண்டைப் (சோழர் ஆட்சி) பிரதிபலிக்கின்றது எனலாம். வரலாற்றுப் பின்புலங்களைக் கொண்டு முதலாம் இராஜராஜன்(993-1014) அல்லது இராஜேந்திரன் (1014-1044) காலத்துக்குரியதெனலாம். திருகோணமலை மத்ஸ்யகேஸ்வர ஆலயத்திற்கு (திருக்கோணேஸ்வரம்) வழங்கப்பட்ட தேவதானம் தொடர்பான முதன்மைச் செய்தியை பதிவுசெய்கின்றபோது சமகாலத்தில் வழங்கப்பட்ட இடப்பெயர்கள், அரசியல் சூழ்நிலை, மக்களின் சமூக, பொருளாதார நிலைகளையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## கல்வெட்டு வாசகம்

1 ஸ் (வஸ்தி ஸ்ரீ)..
2. சாஸநம் சாஸ்வதம் சம்பு ஸ்ரீ கோணபர்வதம் திருகோண
3. மலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மஹா தேவற்கு நிச்சலழிவு
4. க்கு நிவந்தமாக சந்த்ராதித்தவற் செய்த உராகிரிகாம கி(ரி)
5. கண்ட கிரிகாமம் நீர் நிலமும் புன்செய்யும் இடமும்
6. ஊர்ரிருக்கையும் தேவாலயமும் மே நோக்கிய ம
7. ரமும் கீழ் னொக்கிந கிணறும் உட்பட்ட இந்நிலத்து
8. க் கெல்லை கிழக்குக் கழி எல்லை தெற்கெல்லை க
9. ல்லு குடக்கு எத்தகம்பே எல்லை வடக்கெல்
10. லை சூலக்கல்லாகும் சுடர் கோணமா மலை தனி
11 ல் நீலகண்டர் (க்) கு நிலம் இவ்விசைத்த பெருநான்
12. கெல்லையிலகப்பட்ட நிலம் இருநூற்று
13. ஐம்பதிற்று வேலி இது பந்மா யே
14. ஸ்வரரகைக்ஷ (பத்மநாதன் 2006:406)

**தேவதானமும் எல்லைப்பரப்பும்**



நிலாவெளிக் கல்வெட்டு

மத்ஸ்யகேஸ்வரம் கோயிலுக்கு வழங்கப்பட்ட தேவதான நிலமானது கிழக்கே கடல், மேற்கே எத்தகம்பே, வடக்கே சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக் கல், தெற்கே எல்லைகல் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும். அப்பகுதிக்குள் உராகிரிகாமம், கிரிகண்ட கிரிகாமத்து பாசன நிலம், வானம் பார்த்த நிலம் (புன்செய் நலம்), அது உள்ளடக்கிய கோயில், குடியிருப்புகள் (ஊரிருக்கையும் தேவாலயமும்), மரங்கள், கிணறு என்பன அடங்குகின்றன. திருகோணமலையிலுள்ள மச்சகேஸ்வரத்து மகேஸ்வரருடைய தினப்பூசை செய்வதற்காக சூரியனும் சந்திரனும் உள்ளவரை நிலதானம் செய்யப்படுகின்றது என்ற செய்தியைக் காணலாம். நான்கு எல்லைக்குள் அடங்கிய 250 வேலி நிலமும் இக்கோயிலுக்குரியதாகும். இந்நிலம் திருக்கோணேஸ்வரத்து அறங்காவலர்களான சிவனடியார்கள் குழுவின் பாதுகாப்பில் இருக்கும்.

சோழர்கள் நிலங்களை நான்கு வகைப்படுத்தி வரி முறைமையை சீர்படுத்தியதை தென்னிந்திய சாசனங்கள் வலியுறுத்துகின்றன. இக்காலத்தில் காணப்பட்ட நிலங்களை தேவதான நிலம், இறையிலி நிலம், நன்செய், புன்செய் நிலங்கள் என வகைப்படுத்தினர். தேவதான நிலம் என்பது கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலமாகும். தேவதான நிலத்திலிருந்து வரும் வருவாய் கோயிலின் தினசரி வழிபாடுகள், திருவிழாக்கள், மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இறையிலி நிலமானது தேவதான நிலத்துடன் தொடர்புடையது. எனினும் தேவதான நிலம் கோயிலுக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட நிலமாக அமைய, இறையிலி நிலம் அதைவிட பரந்த செயற்பாடுகளுக்காகவும் வழங்கப்பட்டதுடன் வரிவிலக்கும் கொடுக்கப்பட்டது. நன்செய் நிலம் என்பது நீர்ப்பாசன வசதியுடைய உணவு உற்பத்திக்கு உகந்த சாகுபடி நிலங்களைக் குறிக்கும். சோழர் காலத்தில் விவசாயம் மிக முக்கியமான பொருளாதாரமாக இருந்ததால் நன்செய் நிலங்கள் அரசால் சிறப்பாக பராமரிக்கப்பட்டதுடன் புன்செய் நிலங்களை விட அதிக வரி வசூலிக்கப்பட்டது. இந்நிலங்களில் ஏரிகள், வாய்க்கால்கள், ஆறுகள் மூலம் நீர் வழங்கப்பட்டது. புன்செய் நிலமானது மழைநீர் சார்ந்த நிலமாகும். இந்நிலம் அதிகமாக உழவுக்கு உகந்தது அல்லதாயினும் பருத்தி, சோளம் போன்ற சிறுதானிய பயிர்களுக்கு உகந்தது. மத்ஸ்யகேஸ்வரத்துக்கு சோழர்களால் அளிக்கப்பட்ட தேவதான நிலத்திலே நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளடங்கியிருந்தது என்ற முடிவுக்கு வரலாம்.

நிலாவெளிக் கல்வெட்டு பதிவு செய்துள்ள இத்தேவதானம் மாதோட்டத்தில் தாழிகுமரனால் இராஜராஜ ஈஸ்வரத்துக்கு வழங்கப்பட்ட தானங்களை ஒத்திருக்கின்றது. இராஜராஜேஸ்வரத்தில் நெய்வேத்தியம் செய்வதற்கும் பிராமணருக்கு தேவதானம் கொடுப்பதற்கும் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் விழா எடுப்பதற்கும் மாதோட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களைத் தாழிகுமரன் கோயிலுக்கு நிவந்தமாக வழங்கினான் (பத்மநாதன், 2006:66-71). அது போன்று மச்சகேஸ்வரத்து நீலகண்ட மகாதேவர் சந்தியில் நித்திய நிவேதனத்திற்கு உராகிரிகாம, கிரிகண்ட கிரிகாம என்னும் இடங்களிலுள்ள 250 வேலி நிலம் அதனுள் உள்ளடங்கப்பட்ட பகுதிகள் வழங்கப்பட்டது. ஆயினும் நிலாவெளிச் சாசனத்தில் தேவதானத்தை வழங்கியோர் பெயரினை குறிப்பிடும் சாசனப்பகுதி அழிவடைந்துவிட்டது. 250 வேலி நிலம் என்பது அண்ணளவாக 1542.5 ஏக்கர் அளவாகக் காணப்படுவதால் இந்நிலம் அரசப்பிரதிநிதி அல்லது உயர் அரசாங்க அதிகாரி ஒருவரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

**மச்சகேஸ்வரத்தில் பூஜை வழிபாடு**

மச்சகேஸ்வரத்தில் (திருக்கோணேஸ்வரம்) தினமும் ஆராதனைகள் இடம்பெற்றதை "மத்ஸ்யகேஸ்வரமுடைய மஹாதேவற்கு நீச்சலழிவுக்கு நிவந்தமாக…" எனும் சாசனத்தொடர் விளக்குகின்றது. நிச்சலழிவு என்பதை பேரா.கா.இந்திராபாலா நீச்சல்மடை என வாசித்துள்ளார். ஆனால் செ.குணசிங்கம், சி.பத்மநாதன் போன்றோர் நிச்சலழிவு என ஏற்றுக்கொண்டுள்ளனர் (Gunasingam, 1975:64-68, பத்மநாதன், 2006:105). கல்வெட்டு வாசகத்தில் நிச்சலழிவு என்பது தெளிவாகத் தெரிகின்றது. நிச்சலழிவு என்பது நித்தலழிவு என்பதன் மறுவடிவவாகும். நிச்சல் என்பது நாள்தோறும் என்ற கருத்தையும் (த.க.அ 2003:359), நித்தலழிவு என்பது நாள்தோறும் ஆகும் செலவு (த.க.அ 2003:360) என்ற கருத்தையும் வெளிப்படுத்தும். நிவந்தம் என்பது பூசைக்கான செலவுத்திட்டத்தைக் குறிக்கும் (த.க.அ 2003:366). ஆகவே மச்சகேஸ்வர ஆலயத்தில் தினமும் நிகழ்ந்த நாள் பூசை வழிபாட்டுச் செலவுக்காக தேவதானம் வழங்கப்பட்டுள்ளதை அறியலாம்.

**அளவைமுறை:** சோழர் காலக் கல்வெட்டுக்களில் எண்ணல், நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல் போன்ற ஏழு வகையான அளவைமுறைகளைக் காணலாம். மற்ற ஆறு வகை அளவைக்கும் எண்ணல் அளவை இன்றியமையாததாகும். நூல், விரல், சாண், முழம், குழி என நீள உயரத்தைக் கை அல்லது கோல்களால் அளப்பது நீட்டல் அளவையாகும்.

*4 முந்திரிகை = 1 காணி*<br>
*4 காணி = 1 மா*<br>
*20 மா = 1 வேலி*<br>
*1 வேலி = 6.17 ஏக்கர்*

மச்சகேஸ்வரத்திற்கு வழங்கப்பெற்ற தேவதானம் பற்றிய செய்தியில் நில அளவைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. நிலாவெளிச் சாசனத்தில் 250 வேலி அளவினைக் கொண்டதை ‘நிலம் இருநூற்று ஐம்பதிற்று வேலி’ என சாசனத்தொடர் குறிப்பிடுகின்றது. 250 வேலி நிலமும் குறைந்தது 1542.5 ஏக்கர் நிலத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆயினும் சோழர் காலத்தில் விளைச்சலின் அளவைக் கொண்டு நிலப்பிரிப்புக்களிலும், வரி அறவீடுகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பன்மாகேஸ்வரர்**

தமிழ்ச் சாசன வழக்கில் சிவாலயங்களுக்கு வழங்கப்பெற்ற தானங்களைக் குறிக்க பன்மாகேஸ்வரர் ரக்ஷை என்ற தொடர் பயன்படுத்தப்பட்டது. மகேஸ்வரர்ரக்ஷை என்பதன் பொருள் மகேசுவரர் காக்கட்டும் என்பதாகும். வைரவக் கோயில்களில் “சீ/வைஷ்ணவ ரக்ஷை” என்று இருப்பது வழக்கமாகும். நிலாவளிச் சாசனத்திலுள்ள பன்மாகேஸ்வரர் ரக்ஷை எனும் தொடர் சோழராட்சி கால ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது சிவனடியார் கூட்டத்தை குறிக்கும் தொடராக தென்னிந்திய சாசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (SII, III, No140, 141). இலங்கையில் பொலன்னறுவை வானவன் மாதேவி ஈஸ்வரத்திலும் கோகர்ணத்து மச்சகேஸ்வரத்திலும் ஆலய விவகாரங்களை கவனிக்கும் பன்மாகேஸ்வரர் அறங்காவலராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

நிலாவெளிக் கல்வெட்டில் பன்மாகேஸ்வரர் தொடர்பான செய்தியினூடாக ஆலய விவகாரங்களை கவனிக்கும் அறங்காவலராக விளங்கியதை அறியலாம். இவர்கள் தனிப்பட்ட குழுக்களா? அல்லது சமுதாயத்தில் தேர்வு செய்யப்பட்ட குழுக்களா? என்பது தொடர்பாக தெளிவாக அறிய முடியவில்லை. ஆயினும் கோயிலின் கொடைகளை காக்கும் பொருட்டு இவர்களது பாதுகாப்பு வேண்டப்பெற்றது என்று கருதலாம். எனினும் தென்னிந்திய சாசனங்களில் இவர்களுக்கு குற்றங்களை தண்டிக்கும் அதிகாரம், தண்டப்பணம் அறவிடும் அதிகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் குழுவாக செயற்பட்டமை தொடர்பாகவும் இவர்களை கௌரவித்து பூசைகள் வழங்கப்பட்டமை தொடர்பான குறிப்புக்களுண்டு (கிருட்டினன் 1991:227-229).

**கல்வெட்டு வெளிப்படுத்தும் இடப்பெயர்கள்**

திருகோணமலை என்ற பெயரினை பதிவு செய்த முதலாவது ஆவணமாக நிலாவெளிச் சாசனம் அமைகின்றது. கி.பி ஐந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் வட இந்தியாவில் குப்த பேரரசு காலப்பகுதியில் எழுதப்பட்ட வாயுபுராணத்தில் மலயதீவு என்னும் நாட்டின் கிழக்குக்கரையிலுள்ள கோகர்ண்ண என்ற சிவாலயத்தை குறிப்பிடுகின்றது. மலயதீவு பலவகை மணிகள், இரத்தினம், பொன், கடல்படு திரவியங்களும் கிடைக்கின்ற நாடு.

அங்கு அகஸ்திய பவனமும் திருகூட நிலையமும் அமைந்திருக்கின்றன. இவ்விடயம் திருகோணமலை சிவாலயம் அமைந்துள்ள கோணேஸ்வரர் கோயில் தொடர்பான செய்தி என சி.பத்மநாதன் வெளிப்படுத்தியுள்ளார் (2022:9,10).

திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களில் இவ்வாலயம் வைப்புத் தலங்களில் ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது, திருநாவுக்கரசரின் நெய்த்தானம் திருத்தாண்டகம் என்னும் பதிகத்தில் தமிழகத்துக்கு தெற்கேயுள்ள மாகோணமலை என்ற செய்தியுண்டு (தெக்காரும் மாகோணத்தானே – திருமுறை:6.41). மேலும் அவரது ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் கோகரணம் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார் (திருமுறை:6.71). சுந்தரமூர்த்தி சுவாமியால் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஏழாம் திருமுறையின் ஊர்த்தொகைப் பதிகத்தில் மாகோணத்தான் (திருமுறை: 7.47.3) என்றும் திருநாட்டுத்தொகை பதிகத்தில் திருமலை (திருமுறை:7.47.3) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமலை தொடர்பான கருத்தில் திருச்சி மாவட்ட உய்யகொண்டான் திருமலை ஆலயம் தொடர்பான செய்தி என்ற வாதப் பிரதிவாதமுண்டு (பத்மநாதன், 2022:157-161). பன்னிரெண்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட சேக்கிழாரின் பெரிய புராணத்தில் "…ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம் தன்னில் மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செம் கண் மழ விடையார்…" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (பெரியபுராணம், வம்பறா வரிவண்டுச் சருக்கம்: 2788).

திருகோணமலைக்கு புராதன கால முதல் வழங்கப்பட்ட மச்சகேஸ்வரம் என்ற பெயர் இச்சாசனம் எழுதப்பட்ட பதினோராம் நூற்றாண்டில் வழக்கத்தில் இருந்துள்ளதை அறியலாம். தக்ஷிண கைலாசம், கோணம், திரிகோணம், மாக்கோணம், கோண பர்வதம், திரிகூடம், கோகரணம் முதலியன திருகோணமலையின் தலப்பெயர்களாகும். பாளி நூல்களில் கோகண்ண என்று குறிப்பிடப்பட்டுள்ளது (MV 8:25, 37:41, CV, 41:79, 48:5, 57:5, 71:18).

**மத்ஸ்யகேஸ்வரம்**: மச்சகேஸ்வரம் அல்லது மத்ஸ்யகேஸ்வரம் என்பது மகாவிஷ்ணுவின் மச்ச அவதாரம் தொடர்பான புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனை தக்ஷிண கைலாச புராணத்தின் மச்சாவதாரப் படலம் திருமால் மீதான அவதாரமெடுத்து உலகினைக் காத்தபின் மீண்டும் திருமால் உருவெடுத்து தக்ஷிணகைலாயம் எனப் போற்றப்பட்ட மச்சகேஸ்வரத்தை வணங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. தக்ஷிண கைலாச புராணப் பாடல் பகுதி மேல்வருமாறு:

'ஆயிதென் கயிலாயத்தின் றென்புறமணுகி
மாய மச்சாமுடைலையக் கடல் வழி வைத்துத்
தூயதன்னுருக் கொண்டரசர் சந்நிதிதுன்னிச்
சேயகங்கணம் முன்வைத்து வணங்கினன் திருமால்'

'மல்கும் மச்சமாம் கேசவன் பெயரினை மலைக்குப்
புல்கு மச்சகேஸ்வரமெனத் திருப்பெயர் புகன்றார்.' *(தக்ஷிண கைலாச புராணம் I, மச்சாவதாரப் படலம், செய்யுள் 39, 42 பக்.191,193)*

'..திருமாதவருர்க்கு ளொரு பெரிய புனிதமீனு
மாதரவினிறைஞ்சு கதை கயிலாசபுராணமெனவறையலுற்றேன்
மாதுரிய மச்சேந்தியமாம்..'
*(தக்ஷிண கைலாச புராணம் I, தக்ஷிண கைலாச பாயிரம்-II, செய்யுள் 11, பக்.17)*

கோகர்ணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சைவத் திருத்தலங்கள் இருந்தவை பற்றி ஐதிகமோ ஆதாரமோ இல்லை (பத்மநாதன், 2022:19). சோழ இலங்கேஸ்வரனின் எட்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோயிலில் அமைந்துள்ள மானாங்கேணிச் சாசனத்தில் மத்ஸ்யகேஸ்வரத்துக்கு இராஜேந்திரசிங்க வளநாட்டுப் பிரதிநிதிகள் மேற்கொண்ட நடவடிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. '(மும்மு)டி சோழ மண்ட (லத்து இராஜே) ந்த்ர சோழ வள நாட் (டு) சோழ வளநாட் (டு கோண மா) மலை ஸ்ரீ மத்ஸ்ய (ேகஸ்வரமுடையர்) மூலஸ்தானமு(ம்) என கல்வெட்டு பதிவு செய்கின்றது (பத்மநாதன், 2006:407). மாங்கேணி, நிலாவெளி சாசனங்கள் எழுதப்பட்ட காலப்பகுதியில் திருக்கோணேஸ்வரத்தின் மறுபெயர்களில் ஒன்றான மத்ஸ்யகேஸ்வரம் என்ற பெயர் இப்பிரதேசத்தில் வழக்கில் இருந்துள்ளது.

**உராகிரிகாம, கிரிகண்ட கிரிகாமம்:** தேவதானச் செய்தியில் தற்போது வழக்கில் இல்லாத உராகிரிகாம, கிரிகண்ட கிரிகாமம் என்னும் இடப்பெயர்களை காணமுடிகின்றது. ஆயினும் கிரிகண்ட என்பது தொடர்பான குறிப்புகள் திரியாய்க் கல்வெட்டு, பாளி இலக்கியங்கள், புராதன பௌத்த நூல்களில் காணப்படுகின்றன. கிரிகண்ட பர்வதம், கிரிகண்ட எனும் பிரதேசம் பற்றி மகாவம்சத்தில் குறிப்புள்ளது. பண்டுகாபயனின் மாமன்மாருள் ஒருவராகிய கிரிகண்ட சிவ என்பவன் கிரிகண்ட என்னும் பகுதியை ஆட்சி செய்தான் என்ற செய்தியை மகாவம்சம் குறிப்பிடுகின்றது (MV, 10:83). எட்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட திரியாய்க் கல்வெட்டில் கிரிகண்ட சைத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது (EZ IV:158). முதலாம் விஜயபாகு (1055-1110) கிரிகண்ட விகாரையைப் புனரமைத்த செய்தியை சூளவம்சம் குறிப்பிடுகின்றது (CV 60:60).

கிரிகண்ட என்னும் மலையிலுள்ள விகாரையை கிரிகண்ட மகாவிகாரம் என்றனர். திரியாய்க் கல்வெட்டு திரியாய் என்னும் ஊரின் மேற்கிலே கந்தசாமி மலையிற் காணப்படுகின்றது. அதற்கு 200 அடி தூரத்தில் பௌத்த பெரும்பள்ளி ஒன்றின் அழிபாடுகள் உள்ளன. கிரிகண்ட பர்வதம் என்னும் தானமே கந்தசாமி மலை என வழங்குகின்றது. எனவே கிரிகண்ட கிரிகாம என்பது திரியாயிலுள்ள கந்தசாமி

மலையினை உள்ளடக்கியிருந்த ஒரு நிலப்பிரிவு என்று கொள்ள முடிகின்றது (Gunasingam, 1975: 68-69, பத்மநாதன், *69,70*).

**முடிவுரை**

பதினொராம் நூற்றாண்டு மத்தியகால கிழக்கிலங்கையின் திருகோணமலையின் வரலாற்றுக்கும் திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுக்கும் பெருமை சேர்ப்பதாக நிலாவெளிக் கல்வெட்டு அமைந்துள்ளது. இச்சாசனம் குறிப்பிடும் தேவதான நிலம் மச்சகேஸ்வரம் என்று அழைக்கப்படும் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் சமய நடவடிக்கையில் ஒன்றான தினசரி பூஜைக்கு பயன்படுத்தப்பட்டது. தானம் கொடுக்கப்பட்ட ஊர்களிலுள்ள நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் விவசாய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துகின்றன. சோழ அரசின் உறுதியான நிர்வாகத்தால் நிலப் பயன்பாடு அதிகரித்து விவசாய அமைப்பைக்கொண்ட சமூகம் உருவாக்கப்பட்டது. ஆலயம் சார்ந்த சமூக அமைப்பினை நிர்வகிக்க பன்மாகேஸ்வரர் அறங்காவலராக விளங்கியதை அறியலாம். கோணேசர் ஆலய கட்டிடச் சிதைவுகளில் ஒன்றாக நிலாவெளிச் சாசனத்தைக் கருதலாம்.

**உசாத்துணை**


*Epigraphia zeylanica* (EZ), Vol-04, (1994). Asian Education Services, New Delhi, pp191-195.
Gunasingam,S. (1975). *"A Tamil Slab - Inscription at Nilaveli"*, Sri Lanka Journal of the Humanities (SLJH) Volume I, pp. 61 – 71

*South Indian Inscription* (SII), Vol.III , Part III, (1920). Government Press, Madras, pp 286, 287

*The Culavamsa (CV)*, (1998). Geiger, Wilhelm (Trans.), Asian Educational Services, New Delhi, Madars.
*The Mahavamsa (MV)*, (1912). Geiger, Wilhelm (Trans.), Pali Text Society, London.

கிருட்டினன்,அ. *(1991)*. கல்வெட்டில் வாழ்வியல், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

பத்மநாதன்,சி. *(2022)*. திருக்கோணேஸ்வரம், திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

பத்மநாதன்,சி., *(2006)*. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்-I, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

பத்மநாதன்,சி. (பதி). *(1995)*. தக்ஷிண கைலாச புராணம் பகுதி I & II, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

தமிழ் கல்வெட்டுச் சொல்லகராதி (த.க.அ), தொகுதி II, *(2003)*. சாந்தி சாதனா, சென்னை.
திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் - ஐந்தாம் பகுதி *2530-3154*, வம்பறா வரிவண்டுச் சருக்கம் -II, *(1950)*. கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர்.

# அற்புதங்கள்: ஒரு சமய மெய்யியல் விளக்கம்

திரு.வெ. அழகரெத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர், தத்துவவியல் விழுமியற் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## சமய மெய்யியல்: ஓர் அறிமுகம்

மெய்யியல் இரண்டு விதமான விடயங்களை தனது உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும். அதில் ஒன்று முதலாம் தர விடயம். தாவரவியல் தாவரம் தொடர்பான விஞ்ஞான விடயங்களை ஆராய்வது போல் அல்லது சமூகவியல் சமூகம் தொடர்பான விடயங்களை கொண்டிருப்பது போல் மெய்யியலும் முதலாம் தர விடயங்களைக் கொண்டிருக்கும். அவற்றில் அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், அழகியல் என்பன அடங்கும். மற்றயது இரண்டாம் தர விடயங்களை ஆராய்வது. கலை பற்றிய மெய்யியல் (Philosophy of Art), விஞ்ஞானம் பற்றிய மெய்யியல் (Philosophy of Science), மொழி மெய்யியல் (Philosophy of Language) முதலியன குறித்த பாடத்தின் விடயங்களை மெய்யியல் ரீதியாக மீள் பகுப்பாய்விற்கு உட்படுத்துவதாகும். இந்தவகையிலேயே சமயத்தின் உள்ளடக்க விடயங்களாக இருக்கின்ற கடவுள், ஆன்மா, நம்பிக்கை, தீயது (evil), வழிபாடு, அனுஷ்டானம், சடங்கு எனும் விடயங்களை விமர்சன மீளாய்விற்கு உட்படுத்தின. ஒப்பீட்டு சமயம், உலக சமயக் கற்கைகள், இறையியல் என்பனவும் இதுபோன்றே செயற்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அவை சமய மெய்யியல் இருந்து வேறுபட்டவை. இப்பாடங்கள் சமயங்களின் வரலாறு, அதனை ஸ்தாபித்தவர்கள், அதன் கட்டிடக்கலை எனும் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்க, சமய மெய்யியலோ சமய அடிப்படை எண்ணக்கருக்கள், பிரச்சினைகள் முரண்பாடுகள் என்பவற்றை அடையாளம் கண்டு அதை மீளாய்வு செய்கின்றது. ஒரு புறத்தில் சமயங்களில் உள்ள வலிதான விடயங்களை தெளிவாக்கும் அதேவேளை சமய விசுவாசம், நம்பிக்கைகள், நடைமுறைகள் என்பவற்றிக்கு பின்னால் உள்ள விடயங்களை நியாயப்படுத்துகின்றது. அத்துடன் ஒரு கலாசாரத்தினால் சமயக் கோட்பாடுகள் அல்லது அடிப்படை எண்ணக்கருக்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனையும் வெளிக்காட்டுகின்றது. அவற்றுள் முக்கிய எண்ணக்கருவான கடவுள் இருப்பு, கடவுள் நம்பிக்கை, தீமைக்கும் கடவுளிற்கும் இடையிலான வேறுபாடு, அற்புதங்களின் யதார்த்தத்தன்மை, புனித நூல்களின் பகுப்பாய்வு என்பவற்றினையும் தனது விடயமாகக் கொண்டுள்ளது..

பொதுவாக சமய மெய்யில் கொண்டிருக்கிற விடயங்களை நோக்கும் போது அது சமய விடயங்களை ஆய்வு செய்வது போல் தோன்றுகின்றது. அதன் உண்மையான யதார்த்தம் அவ்வாறானது அல்ல. சமய மெய்யியல் சமய விசுவாச நிலையில் என்ன நடக்கின்றது

என்பதனை ஆய்வு செய்வது அல்ல. பகுப்பாய்வு விபரிப்பிற்கும் அப்பால் யதார்த்த ரீதியான விளக்கங்களை முன்வைக்கின்றது. சமய மெய்யியலாளர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் சமய நம்பிக்கைகளை நாம் கொண்டிருப்பதற்கான பொருத்தமான ஆதாரங்கள் என்ன என்பதனையும் இவர்கள் ஆராய்கின்றனர். இவர்களின்படி சமய விசுவாசம் என்பது ஒன்றுமில்லாமையில் இருந்து திடீரென தோன்றும் ஒன்றல்ல. இது காலம் காலமாக தொடர்ச்சியான மாற்றங்களிற்கும், விட்டுக்கொடுப்புகளிற்கும், புதிய சேர்க்கைகளிற்கும் உட்பட்டு வளர்ச்சியடைந்து வந்த விசுவாசமாகும். உட்பொருளின் அடிப்படை என்ன? எனும் தீர்மானங்களில் இருந்து எழுவதே விசுவாசங்களாகும். இவ்விசுவாசம் ஒரு அரூபமான அறிவுசார்ந்த விடயம் மட்டுமல்ல. அதற்கும் மேலாக தனி மனிதனுடையதும் சமூக குழுக்களுடையதுமான பாரம்பரிய விடயங்களாகும். இவற்றுள் ஒரு எண்ணக்கருவே அற்புதங்கள் (Miracles) ஆகும். இதன் இயல்பு பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சமயங்களில் அற்புதங்கள்**

அற்புதம் கீழைத்தேயம் மட்டுமன்றி மேலைத்தேயத்திலும் சமய வாழ்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சமய நடத்தையாகக் காணப்படுகிறது. சமய வாழ்வில் உள்ளவர்கள் வினாவிற்குட்படுத்தாமல் ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு விடயமாகும். இதற்கு அடிப்படையாக அமைவது விசுவாசம் என்பதாகும். சமயம் அல்லது ஆன்மீகம் சார்ந்த எவரும் இது பற்றிய வினா எழுப்புவதில்லை. எந்தவொரு கிறிஸ்தவனும் கன்னி மரியாவிற்கு எவ்வாறு குழந்தை பிறந்தது என்பதையோ தண்ணீரை திராட்சை ரசமாக்கியது பற்றியோ வினவுவது இல்லை. எலும்புருவைப் பெண்ணாக்கியது அல்லது பாம்பு தீண்டி இறந்த குழந்தையை உயிர்ப்பித்தது பற்றி எந்த இந்துவும் கேள்விக்குரியதாக்குவதில்லை. இது சமயம் சார்ந்த நம்பிக்கையாகும். இது போன்ற விடயங்களை வேறுபட்ட வகையில் வியாக்கியானப்படுத்துவதே சமய மெய்யியல் ஆகும்.

கடவுளானவர் எல்லாம் வல்லவராகவும் சர்வ வல்லமை உள்ளவராகவும் வெளிக்காட்டிய மதங்கள் அதனுடன் இணைந்ததாக அற்புதம் என்பதனூடாகவும் வெளிக்காட்டின. சர்வ வல்லமை உள்ள நிலையில் கடவுள் வெளிப்படுவதாகவும் அதனை மக்கள் வணங்குவதாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதனால் அதீதமான செயற்பாடுகளை நாம் காணக்கூடியதாக உள்ளது. வேதங்கள் கடவுளால் அருளப்பட்டன என்றும் அல்குரான் கடவுளின் வசனங்கள் என்றும் கூறுவதன் ஊடாக அதனுள் வருகின்ற சம்பவங்களும் அதீதமானவையாகவே காணப்பட்டன. அல்குரானிலும் விவிலியத்திலும் அதிகளவான அதிசய சம்பவங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இது போன்று இந்து சமய பாரம்பரியத்தில் சமண, பௌத்த மதங்களை தோற்கடிப்பதற்காக நாயன்மார்கள்

அற்புதங்கள் புரிந்ததாக திருத்தொண்டர்தொகை, பெரியபுராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன. எனவே இவற்றை சமய மெய்யியல் சார்ந்து விளக்குவது முக்கிமானதாகும்.

**அற்புதம்: ஓர் அறிமுகம்**

அற்புதம் என்றால் என்னவென பல்வேறு வகையான விளக்கங்களும் வரைவிலக்கணங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. பலவாறாக இது விளக்கப்பட்டாலும் பொதுவான ஒரு வரைவிலக்கணத்தை வழங்குவது அசாத்தியமானது. ஏனெனில் அற்புதத்தின் இயல்பு, மக்கள் அதை புரிந்து கொள்ளும் விதம் என்பன ஆளுக்காள் வேறுபடுகின்றது. பொதுவாக இயல்பில் நன்மையாக இருக்கிற ஒரு வியப்பான செயலாகும் (An extraordinary coincidence of beneficial nature) என ஹோலண்ட என்பவர் குறிப்பிடுகின்றார். ஆனால் அவற்றின் வகைப்பாட்டின் அடிப்படையில் அதன் இயல்புகளை கொண்டு விளங்கிக் கொள்ளலாம் என்கின்றனர். இவற்றை மூன்று வகைக்குள் சமய மெய்யியலாளர்கள் அடக்குகின்றனர்.

1. நன்மைகள் தரும் அதிசயம் / ஆச்சரியம்
2. நம்பமுடியாத அளவு ஆச்சரியத்தை தருவது
3. சாதாரணமாக இடம்பெறமுடியாத ஒரு விடயம்

**1. நன்மைகள் தரும் அதிசயம் / ஆச்சரியம்**

நடந்திருப்பதற்கு முரணான வகையில் அதிஸ்டவசமாக நன்மைசார் நிகழ்வு இடம்பெறுவது இவ்வகைக்குள் அடங்கும். உதாரணமாக எமது வாழ்க்கையில் சில விடயங்களை காணும்பொழுது இது எவ்வாறு சாத்தியம் என வியக்கின்றோம். அதிவேக பாதையில் பிரயாணம் செய்த ஒருவர் கடுமையான விபத்திற்கு உள்ளாகி வாகனம் முற்றாக சேதமடைந்த நிலையில் அவருக்கு எவ்வித காயமும் இல்லாமல் வெளிவரும் போது அதை நாம் ஒரு அற்புதமாக் கொள்கின்றோம். ஏனெனில் நடந்திருக்க வேண்டிய சம்பவத்திற்கு எதிர்மாறானதாக ஒரு நன்மை நடப்பது எல்லோருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இது முதலாவது வகை அற்புதமாகும்.

**2. வியற்பிற்குரிய அற்புதங்கள்**

ஒரு சாதாரண விடயம் எவரையும் வியப்பில் ஆழ்த்துவதில்லை. அது சாதாரணமான நிலைக்கும் அப்பால் சில விடயங்களை வெளிப்படுத்தும் போதே நாம் வியப்படைகின்றோம். பேரியல்பு (Greatness), கடவுளின் நன்மை என்பன எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. காதலின் சின்னமாகக் கருதப்படுகிற தாஜ்மஹால் ஒரு வியப்புக்குரிய விடயமாகும். இது போன்று அதிசயமான குழந்தை பிறப்புக்கள்

வியப்பிற்குரியதாக உள்ளன. இவற்றை தொகுத்து நோக்கும்போது யதார்த்ததிற்கு மாறுபாடான அதிசயிக்கும் விடயங்களை காணும்போது வியப்படைகின்றோம். இவ்வியப்பை நாம் அற்புதம் எனவும் கருதுகின்றோம். ஆனால் இதனை சாதாரணமாக இடம்பெறும் நிகழ்வாகக் கருதுவதில்லை. இவற்றிற்கு பரம்பொருளின் கருணை/ கடவுளின் சக்தி இருப்பதாகக் கருதுவதனால் இதனை சமய மெய்யியலாளர்கள் அற்புதங்கள் என்ற வகைக்குள் அடக்குகின்றனர்.

### *3. சாதாரணமாக இடம்பெறமுடியாத ஒரு விடயம்*

மேலே தொகுக்கப்பட்ட இரண்டு விதமான அற்புதங்களும் உயிரியல், பௌதீகவியல், மருத்துவம் முதலான விதிகளின் அடிப்படையில் விளக்கப்படக்கூடியன. மோட்டார் சைக்கிள் ஒன்றில் தாங்கள் உருவாக்கிய கிணற்றினுள் ஒருவர் கிடையாக ஓடுவதைப் பார்க்கின்றோம். மற்றையவர் மோட்டார் வாகனத்தில் ஏறி இறங்குவதைப் பார்த்திருக்கின்றோம். இவை எல்லாம் அதிசயங்களாக இருந்தாலும் இவற்றை விஞ்ஞான ரீதியாக விளக்கமுடியும். ஆனால் இயேசு தண்ணீரை வைனாக மாற்றியதை அல்லது இயேசு மீண்டும் உயிர்த்தெழுந்ததை விஞ்ஞான விதிகளைக் கொண்டு விளக்க முடியுமா? நாயன்மார்கள் செய்த அற்புதங்கள் பலவற்றை இங்கு எடுத்துக் கொள்வோம். கல் தெப்பமாக மாறியது, நஞ்சு அருந்தி இறக்காமல் இருந்தது என பலவற்றை கூறலாம். இவை அனைத்தும் சாதாரண இயற்கைக்கு அப்பாற்பட்ட விடயங்களாகும். எனவே அற்புதம் என்பது இயற்கை விதிகளை மிஞ்சிய செயற்பாடுகளாகும். அவற்றை சாதாரண மொழிகளினாலோ, சாதாரண விதிகளினாலோ விளக்கமுடியாது. டேவிட் ஹியூமின்படி ஒரே விடயங்களை பல தடவை காணும் போது நாம் அவற்றை அற்புதமாக எடுப்பதில்லை. ஆனால் இயற்கை விதிகளுக்கு முரண்பட்ட விதிவிலக்குகளை காணும் போது அவற்றை அற்புதம் என்கின்றார். இதற்கு சில வேளைகளில் அறிவுக் குறைபாடு காரணமென்பதும் இவரது விளக்கமாகும்.

பௌதீக காரணிகள் அல்லது உயிரியல் காரணிகள் நோய் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றன. மனிதர்களின் சாதாரண உடல் உள சமநிலையில் மாற்றமானதால் நோய்கள் ஏற்படுகின்றன என்பது பொதுவான புரிதல். ஆனால் கெட்ட ஆவிகளின் தாக்கத்தினாலேயே நோய் வருகின்றது என்ற எண்ணம் பல நூற்றாண்டுகளாக மனித மனதில் காணப்பட்டது. இதனை உரிய வழி கொண்டு தீர்ப்பது சாத்தியம். இதனை அறியாதவர்கள் அற்புதச் செயலாகவே கொள்வர். சூரியனைப் போன்று சந்திரனும் சுயமாக ஒளியைத் தருகின்றது என்ற போக்கும் மனித வரலாற்றில் காணப்பட்டது. இவற்றின் அடிப்படை சாதாரண அறிவிற்கு அப்பாலான நிலைப்பாடாகும். அற்புதம் நிகழும் போது அதனை நிரூபிக்க முடியாமல் இருப்பதே இதன் அடிப்படையாகும்.

பல நூற்றாண்டுகளாக நிரூபிக்க முடியாமல் இருப்பது அற்புதம் என கூறுவதற்குக் காரணமாகும். எனினும் அற்புதம் என்பதனை அனைத்து சமய பிரிவுகளும் ஏற்றுக்கொண்டன. அவற்றை பொய் என நிரூபிக்க யாரும் முயற்சிப்பதில்லை. கடவுள் அருளால்தான் அவன் பிழைத்தான் எனவும் கடவுள் தான் எங்களைக் காப்பாற்றினான் எனவும் நாம் சிந்திப்பது அவை அற்புதங்கள் என்பதனாலேயே ஆகும். எனவே அற்புதங்கள் நல்ல நோக்கங்களுக்காக கடவுளால் ஆற்றப்படுகின்றன. எனவே அற்புதம் என்பதனை பொதுவான முறையில் வரைவிலக்கணப்படுத்துவது முக்கியமாகும். ''சில நல்ல நோக்கங்களுக்காக கடவுளால் ஆற்றப்படுகின்ற இயற்கை விதிகளுக்கு அப்பாலான ஒரு விடயமே அற்புதமாகும்'' என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

**விமர்சனம்**

அற்புதம் என்பது வெறும் சமய நம்பிக்கைமட்டுமல்ல அது நமது பகுத்தறிவை சவால் செய்யும் ஒரு நடத்தையுமாகும். இயற்கை விதிகளை மீறி இவ்வியப்பான செயல்களை தெய்வீக அடிப்படையில் பலமான நிலையில் நம்பப்படுகின்றது. இயற்கை விதிகளுக்கும் அற்புதத்திற்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதன் மூலம் இது விமர்சனத்திற்குள்ளாகின்றது. அற்புதம் ஒன்று இயற்கை விதிகளுக்கு அப்பாலானது எனின் அதனை அனுபவத்தின் மூலம் விளக்க முடியாது. இங்கு இயற்கை விதிகளை இயற்கை நிகழ்வுகளின் மீதே பிரயோகிக்க முடியும். ஒரு நிகழ்வு கடவுளால்தான் ஆற்றப்பட்டது எனும் போது அது இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டதாகும். ஒரு விடயம் பௌதீக ரீதியாக சாத்தியமில்லை என்பதற்காக அது இடம்பெறாமல் இருக்கும் என்பதுமில்லை. அவ்வாறு இடம்பெறும்போதே அது அற்புதமாகிறது.

அற்புதம் என்பதனை டேவிட் ஹியூம் என்ற ஸ்கொட்லாந்து சிந்தனையாளர் இதனை விமர்சனத்திற்குட்படுத்துகிறார். இவர் தனது அறிவு சார்பான ஒரு விசாரணை எனும் நூலின் பத்தாவது அத்தியாயத்தில் விமர்சிக்கின்றார். இயற்கையானது ஒரு ஒழுங்கில் உள்ளது. சம்பவங்கள் அனைத்தும் ஒன்றின் பின் ஒன்றாக அதேபோல் இடம்பெறுகின்றன. இங்கு மாற்றம் நிகழ்வதில்லை. இவ்வாறான தொடர் நிகழ்வில் இயற்கை விதிகளுக்கு மாறாக ஒன்றைப் பார்த்தால் அதனை அற்புதம் என்கிறோம். அது அவ்வாறானதல்ல என்பது இவர் வாதம். நாங்கள் அதனைப் பற்றிய தவறான பார்வை (Misperceived) அல்லது தவறான புரிதல் (Misunderstood) கொண்டிருக்கிறோம் அல்லது ஒரு ஏமாற்று நிகழ்வு (Fraud) நடந்திருக்கின்றது என்பதே உண்மையாகும் என்கிறார். தூரத்திலிருக்கும் ஒரு எண்சதுர (Octagonal) கோபுரம் ஒன்றை உருளை கோபுரம் என தவறாக பார்ப்பதற்கு இது சமனாகும் என்கிறார். இவ்வாறு ஹியூம் போன்று பலர் பகுத்தறிவு

ரீதியான விமர்சனங்களைச் செய்தாலும் அற்புதம் என்பது இருப்புடைய ஒரு செயல் என்பது பொதுவான ஏற்றுக்கொள்கையாகும்.

**முடிவுரை**

அற்புதம் என்பது அனேகமான சமூகங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயலாகவே காணப்படுகின்றது. மனிதன் தனது இயலுமையால் விளக்க முடியாத செயல்களை அற்புதம் என்றான். நல்ல நோக்கங்களுக்காக கடவுளால் இயற்கை விதிகளையும் தாண்டிய வகையில் ஆற்றப்படுவனவே அற்புதங்கள் என பொதுவாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இதனை ஆற்றும் இறைவன் காட்சிப்படுவதில்லை. நாங்களே உணர்கின்றோம். இறக்கும் தறுவாயில் இருக்கும் ஒருவன் பிழைப்பதனை அவரது சுற்றம் அறியும் அல்லது குறித்த நபர் உணர்கிறார். இலங்கையில் யுத்த காலங்களில் வாழ்ந்தவர்களைக் கேட்டால் அவர்கள் மரணத்தறுவாயிலிருந்து உயிர் தப்பிய பல சம்பவங்களைக் கூறி அவை கடவுளின் அற்புதம் என அவர்கள் விபரித்ததை கண்டிருக்கிறோம். எவ்வளவுதான் பகுத்தறிவு, விஞ்ஞான அறிவு வளர்ந்திருந்தாலும் சமய ரீதியான விடயங்களை நிராகரிக்க முடிவதில்லை. அவ்வாறான ஒரு விடயமாக ‘‘அற்புதம்’’ என்பதுவும் காணப்படுகின்றது.



# Frederick Herzberg's Two-Factor Theory

Mrs. D. Vithukshana
Lecturer (Probationary), Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern Universsity, Sri Lanka

## Introduction

Frederick Herzberg, was an American psychologist mostly known for introducing the two-factor theory or Herzberg's motivation-hygiene theory**.** His theory tries to get to the root of motivation in the workplace. Published in his famous article, "One More Time: How do You Motivate Employees," the conclusions he drew were extraordinarily influential, and still form the bedrock of good motivational practice nearly half a century later. He's especially recognized for his two-factor theory, which hypothesized that there are two different sets of factors governing job satisfaction and job dissatisfaction: "hygiene factors," or extrinsic motivators and "motivation factors," or intrinsic motivators. Motivation factors are essential to motivate an employee to higher performance. The term *hygiene* is used in the sense that these are maintenance factors. Hygiene factors are extrinsic to work.

## Overview of Two Factor Theory

In 1959, Herzberg, Mausner and Snyderman published the two-factor model of work motivation and developed the motivation-hygiene theory, which was influenced by Maslow's hierarchy of needs (Jones, 2011). Herzberg created a two-dimensional paradigm of factors influencing people's attitudes towards work. Initially, Herzberg and his colleagues developed a hypothesis that satisfaction and dissatisfaction with a job were affected by two different sets of factors and thus satisfaction and dissatisfaction could not be reliably measured on the same continuum (Alshmemri, 2017). Which factors in an employee's work environment caused satisfaction or dissatisfaction. After two pilot studies, the first involving 13 labourers, clerical workers, foremen, plant engineers and accountants, and the second involving 39 middlemanagers, his theory was further developed and expanded (Alshmemri, 2017). Herzberg et al. (1959) studied more than 203 accountants and engineers working in nine factories in the Pittsburgh area of the United States to determine which factors influence the worker's work environment and cause satisfaction or dissatisfaction (Alshmemri, 2017).

The main hypothesis of Herzberg's theory was that certain factors lead to positive attitudes towards work, and others lead to negative attitudes. The other hypotheses stated that the factors and effects involving long-range sequences of events and short-range sequences of events, respectively, were distinct (Alshmemri, 2017).

According to their research data, the original hypothesis of the Herzberg study was restated and then changed to the two-factor theory of job satisfaction. The two factors that had an effect on job satisfaction were divided into two sets of categories.

The first category was associated with 'the need for growth or self actualisation', and became known as the motivation factors. Motivation factors included achievement, recognition, the work itself, responsibility, advancement and the possibility for growth. The other category of factors was related to 'the need to avoid unpleasantness', and was known as hygiene factors. Hygiene factors included company policies and administration, relationship with supervisors, interpersonal relations, working conditions and salary (Timmreck, 2001& Cahill, 2011). Motivation factors led to positive job attitudes and hygiene factors surrounded the 'doing' of the job. At the heart of the two-factor theory is the difference between motivation and hygiene factors, or intrinsic and extrinsic factors. Herzberg described motivation factors as intrinsic to the job and hygiene factors as extrinsic to the job. Thus, motivation factors operate to only increase and improve job satisfaction; whereas hygiene factors work to reduce job dissatisfaction. According to Herzberg et al. (1959).

These two sets of factors affect employees in different ways and contribute to their overall job satisfaction and motivation. The following tables offer a summary of Herzberg's Two-Factor Theory. **Table 1** presents an overview of the **Motivational Factors** and **Hygiene Factors**.

**Table 1: overview of the Factors in Herzberg's Theory**

| | Motivation Factors | Hygiene Factors |
|---|---|---|
| 1 | Advancement | Interpersonal relationship |
| 2 | Work itself | Salary |
| 3 | Possibility of growth | Policies and Administration |
| 4 | Responsibility | Supervision |
| 5 | Recognition | Working conditions |
| 6 | Achievement | |

Source: Best & Thurston, 2004; Kacel et al., 2005

**Motivation Factors**

According to Herzberg, the motivator factors pertain to the job content, they are intrinsic to the job itself and do not result from "carrot and stick incentives". They comprise the physiological need for growth and recognition. The absence of these factors does not prove highly dissatisfying but when present, they build strong levels of motivation that result in good job performance. They are therefore called satisfiers or motivators.

These factors include;

1. Advancement: Herzberg defined advancement as the upward and positive status or position of someone in a workplace. Meanwhile, a negative or neutral status at work represents negative advancement.
2. Work itself: The work itself should be meaningful, interesting and challenging for the employee to perform and to get motivated.
3. Possibility of growth: There must be growth and advancement opportunities in an organization to motivate the employees to perform well.
4. Responsibility: The employees must hold themselves responsible for the work. The managers should give them ownership of the work. They should minimize control but retain accountability.

5. Recognition: The employees should be praised and recognized for their accomplishments by the managers.
6. Achievement: The employees must have a sense of achievement. This depends on the job. There must be a fruit of some sort in the job.

**Hygiene Factors**

The hygiene factors are also referred to as the maintenance factors and comprise the physiological, safety and love needs from Maslow's hierarchy of needs. They are factors that are not directly related to the job but the conditions that surround doing the job. They operate primarily to dissatisfy employees when they are not present, however, the presence of such conditions does not necessarily build strong motivation Gibson (2000). Herzberg called these hygiene factors, since they are necessary to maintain a reasonable level of satisfaction and can also cause dissatisfaction. The hygiene factors are not direct motivators but are necessary to prevent dissatisfaction and at the same time serve as a starting point for motivation (Huling, 2003).

These factors include;

1. Interpersonal relationship: The relationship of the employees with their peers, superiors and subordinates should be appropriate and acceptable. There should be no conflict or humiliation element present.
2. Salary: This includes all forms of compensation at one's place of work, such as wage or salary increases, or unfulfilled expectations of wage or salary increases or decreases. Hospital policies should be clear regarding salary increases and bonuses in the workplace.
3. Policies and Administration: The company policies should not be too rigid. They should be fair and clear. It should include flexible working hours, dress code, breaks, vacations, etc.
4. Supervision: Effective supervision doesn't directly motivate employees, it plays a crucial role in preventing dissatisfaction. Good supervision, which includes clear guidance, support, and fair treatment, helps create a positive work environment. However, poor supervision, such as micromanagement or inconsistent feedback, can lead to frustration and disengagement. Therefore, while supervision ensures a

satisfactory environment, it does not inherently inspire higher motivation or performance.

5. Working Condition: These factors involve the physical surroundings of the job, and whether there are good or poor facilities. Working conditions may include the amount of work, space, ventilation, tools, temperature and safety. A good environment, as opposed to a poor environment, makes employees satisfied and proud.

Combining the hygiene and motivator factors can result in some scenarios namely:

- High hygiene + high motivation: The ideal situation where employees are highly motivated and have few complaints.
- High hygiene + low motivation: Employees have few complaints but are not highly motivated. The job is then perceived as a paycheck.
- Low hygiene + high motivation: Employees are motivated but have a lot of complaints. A situation where the job is exciting and challenging but salaries and work conditions are not.
- Low hygiene + low motivation: The worst situation unmotivated employees with lots of complaints (George, J. M. & Jones, G. R., 2005).

This theory sought to encourage managers not to be one-sided in considering factors to motivate employees but rather consider all two factors optimally motivate and satisfy employees to get the best out of them.

**Concluding Remarks**

Institutional leaders understand that employee demotivation is often tied to factors beyond the work itself. Addressing these issues can lead to improved motivation, greater job satisfaction, and enhanced organizational performance. By recognizing individual goals and understanding broader skills and abilities, leaders can create more opportunities for growth and development. Employees should be seen as valuable assets to the organization, capable of acquiring new skills that are vital for future success. Investing in the enhancement of their skills and knowledge will, in the long run, increase the value of the organization’s human

resources. More importantly, this investment fosters greater engagement, understanding, and commitment among staff.

Therefore, Herzberg's Two-Factor Theory is highly relevant across various organizational contexts, particularly in motivating employees. However, it's important to recognize that applying the theory alone may not yield absolute results, as other factors can also influence motivation and job satisfaction.

**References**

Alshmemri, M., Shahwan-Akl, L., & Maude, P. (2016). Job Satisfaction of Saudi Nurses Working in Makkah Region Public Hospitals, Saudi Arabia. Life Science Journal, 13(12).

George, J. M. & Jones, G. R. (2005), "Understanding and managing organisational behavior", (4th edition.). Upper Saddle River, NJ, Pearson Prentice, New York: McGraw-Hill.

Gibson, J., Ivanevich, L., John, M. & Donnelly, J. H. (2000), "Organisations-Behaviour-Structure- Processes"' 10th Edition. Boston. McGraw-Hill.

Herzberg, F. (1966). Work and the nature of man. New York: World Publishing.

Herzberg, F., Mausner, B., & Snydermann B. (1959). The motivation to work. New York: Wiley.

Huling, E. (2003). "Rough Notes", Journal of Applied Psychology, Vol. 2 No. 1 pp. 17-24.

Jones, T. L. (2011). Effects of motivating and hygiene factors on job satisfaction among school nurses. PhD thesis, Walden University, Minneapolis, MN.

Timmreck, T. C. (2001). Managing motivation and developing job satisfaction in the healthcare work environment. Healthcare Manager, 20(1), 42–58.

## மட்டக்களப்பு மக்கள் வாழ்வியலில் உணவுக் கலாசாரம்

திரு. தங்கராசா கோபிநாத்
விரிவுரையாளர், கர்நாடக இசைத்துறை, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இலங்கையின் கிழக்குக் கரையோரத்தின் மத்திய நிலையமாக இருப்பது மட்டக்களப்பு மாவட்டமாகும். இங்கு உள்நாட்டில் பெரிய நீர்ப்பரப்பு கணக்கிடாது 2466.63 சதுரகிலோமீற்றர் பரப்பளவுடையது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 3.8 மட்டக்களப்பு மாவட்டமாகும். 1961 ஆண்டின் முன் பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்த இம்மாவட்டம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆந் திகதியன்று மட்டக்களப்பு, அம்பாறை என்ற இரு நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. மட்டக்களப்பு பிரதேசமானது வடக்கே வெருகலாறு முதல் தெற்கே குமுக்கன் ஆறுவரை பரந்திருந்த நிலப்பரப்பாகும். நிர்வாக நோக்கத்துடன் வேறுபடுத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தை பண்பாட்டு ரீதியாக வரையறுப்பது கடினமாகும். மட்டக்களப்பு மாவட்டமானது ஏராளமான தனித்துவமான சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. சடங்கு, பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பழமை பேணும்பண்பு, கலைகளின் ஈடுபாடு, கூத்துக்களின் நிலவுகை, கொம்புமுறி விளையாட்டு, பன்முக தன்மை வாய்ந்த உணவுக்கலாசாரம் என ஏராளமான சிறப்பம்சங்களை கொண்ட இப்பிராந்தியத்தை "மானிடவியலாளர்களின் சுரங்கம்" என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு புவியியல் அமைப்பு காரணமாக காணப்படுகின்றது. புவியியல் பின்னணி, காலநிலை, வளங்கள் என்பவற்றை பொறுத்தே மக்களது வாழ்வியல் அம்சங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

இங்கு வாழ்கின்ற மக்களது உணவுக்கலாசாரம் பன்முக தன்மையையும் பல தனித்துவ அம்சங்களையும் கொண்டுள்ளது. இங்கு வாழும் மக்களது பிரதான தொழில் விவசாயம் ஆகும். அதனை அடுத்து மீன்பிடியினை கூறலாம். வேளாண்மை செய்தல் பற்றி கி.பி 17 நூற்றாண்டில் பாடப்பட்ட "வேளாண்மை விதைப்பு வசந்தன்" சான்று பகிர்கின்றது.

" பச்சைப் பெருமாள் கறுப்பன் பானைமுக வன்செழும்
பன்றிக் கூரன் வெள்ளைவாலன் பவளச்சம்பா
செம்பியேப லருவிரும்பும் வெள்ளைவாணன் இந்த
மேதினியெல்லாம் புகழும் முத்துச்சம்பா"(வேளாண்மை விதைப்பு வசந்தன்)

இப்பாடலில் பச்சைப்பெருமாள், கறுப்பன், ஆனைமுகவன், பன்னிக்கூரன், வெள்ளைவாலன், செம்பவளச்சம்பா, சாம்பற்கறுப்பன், குறவன் சம்பா என ஏராளமான நெல் இனங்கள் விதைக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இதனை அடிப்படையாகக்கொண்டு மட்டக்களப்பு மக்களது பிரதான உணவு நெல்லரிசிச்சோறு ஆகும். பண்டைய மட்டக்களப்பில் நெல் உற்பத்தி சுயதொழிலாகவும் முதலாளி, தொழிலாளி முறையிலும் நடைபெற்று வந்தது. இங்கு நெல் உற்பத்திக்குரிய

நிலச்சுவாந்தர்கள் போடிகள் என அழைக்கப்பட்டனர். இதனால் பெருமளவு நெல் உற்பத்தி செய்யப்பட்டதனால் மக்கள் 03 வேளையும் நெல்லரிசிச்சோற்றினை உணவாக உண்டு வந்தனர். காலை வேளையில் தண்ணீர் ஊற்றப்பட்ட பழஞ்சோற்றினையும் ஏனைய இரு வேளைகளில் உடன் சமைத்த சோற்றையும் உணவாக உண்டனர். போதுமான அளவு நெல்லரிசி உற்பத்தியானமையால் ஏனைய இடங்களைப் போல் வேளைக்கு வேளை மாற்றுணவு உண்ணும் பழக்கம் ஏற்படவில்லை.

மட்டக்களப்பில் முன்னைய காலம் முதல் தவிட்டரிசியும், வெள்ளரிசியும் தரக்கூடிய நெல்வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. தவிட்டரிசி இங்கு உற்பத்தி செய்யப்பட்டாலும் தவிட்டைப்போக்கும் வண்ணம் அரிசியை குற்றி எடுப்பதும் இங்குள்ளோர் பழக்கமாக இருந்தது. இவ்வாறு அரிசியில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தவிடு குழந்தைகள் உண்பதற்கும், பிட்டு, உரொட்டி ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது. எனினும் அண்மைக்காலத்தில் தவிட்டினுடைய போசாக்குத்தன்மை இங்கு அதிகமாக நோக்கப்படுகின்றது. எழுவான்கரையை விட படுவான்கரையில் சோறு சமைக்கும் போது அரிசிக்கு அளவுக்கதிகமாக நீர் வைத்து சோற்றை வடித்தெடுப்பர். அரிசி அவிவதற்கு போதுமான நீரை வைத்து சோறாக்கும் முறை பாரம்பரியமாக தொன்றுதொட்டு தொடரப்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. வடிகஞ்சை வீணாக்காமல் பிள்ளைகளுக்கு குடிக்கக் கொடுக்கும் மரபு காணப்படுகின்றது.

பண்டைய காலத்தில் மட்டக்களப்பை நெற்களஞ்சியம், தானியக்களஞ்சியம் என அழைத்தனர். அந்தவகையில் தானியங்களை இடை உணவிற்கும், பலகாரவகை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டன. இங்கு பண்டையகாலம் முதல் தற்காலம் வரை சோளன், குரக்கன், உழுந்து, பயறு, எள்ளு, தினை, நிலக்கடலை, கொள்ளு, முதலியவற்றைக் காணலாம். வறுத்த சோளன்மாவை சீனி, தேங்காய் சேர்த்து உண்பதும் பச்சை சோளன் பிட்டு மாவாக அவித்து உண்பதும் இங்கு பாரம்பரிய பழக்கமாகும். மற்றும் குரக்கன்மாவில் தயாரிக்கப்பட்ட பிட்டு, களி, உரொட்டி, கூழ், இடியப்பம் என்பன இடை உணவுகளாக உண்ணப்படும். அத்துடன் இங்கு தாமரைக்கிழங்கு, கபலைக்கிழங்கு, கொடிவள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வற்றாளைக்கிழங்கு என்பன அவித்து சாப்பிடப்பட்டன. மற்றும் மரவள்ளிக்கிழங்கை தனி உணவாகவும் கறியாகவும் மக்கள் உண்டு வருகின்றனர். அத்துடன் மரவள்ளிக்கிழங்குச் சொதி அல்லது ஆணம் வைத்தல் பரவலாக காணப்படும் உணவுப்பழக்கம் ஆகும். பொரியல், நசியல், கடையல், குழம்பு போன்ற பல்வகை உணவாக உண்பதனையும், பஞ்ச காலமாகிய கார்த்திகை, மார்கழி மாதங்களில் மரவள்ளிக்கிழங்கு அவியலை அதிகமாக உணவாகக் கொள்ளப்படுவதனால் இதனை “பஞ்சந்தாங்கி” என மக்கள் அழைப்பர். தற்காலத்தில் மழைக்காலத்திலும் பொழுதினை போக்கும் பொருட்டும் மரவள்ளிக்கிழங்கு அவியலும் சம்பலும் செய்து சாப்பிடுவது வழக்கமாகிக் கொண்டு வருகின்றனர்.

காடுகளிலும் வயல்வெளிகளிலும் வாய்க்கால் ஓரங்களிலும் சமைக்கக்கூடிய இலைக்கறிவகைகளைக் காணலாம். இவற்றுடன் உற்பத்தி செய்யப்படுகின்ற கீரைவகைகளும் உள்ளன. இங்கு சமையலுக்கு பயன்படுத்தும் கீரைவகைகளாக அகத்தி, கானாந்தி இலை, காரைஇலை, குப்பைக்கீரை, குப்பைமேனி, குறிஞ்சாஇலை, தகரை, திராய், தூதுவளை, பசளி, பொன்னாங்காணி, முருங்கை இலை, வல்லாரை, வள்ளல் போன்ற இலைகளில் வல்லாரை, தூதுவளை என்பன பச்சடி அல்லது சம்பல் செய்து உண்பர். மற்றும் ஏனைய இலைக்கறிவகைகளை பாரம்பரியமுறைப்படி சுண்டல், கடையல், ஆக்கல், சொதி என சமைத்து உண்பர். மாட்டுப்பட்டி, வயல்வாடிகளில் வாழ்பவர்கள் இலைக்கறிகளை பெரிதும் உண்டு வந்ததாக பெரியோர் கூற கேட்டு இருக்கின்றோம்.

மட்டக்களப்பில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்தாலும் மரக்கறி அல்லது காய்கறி மட்டும் உண்பவர்கள் இங்கு மிகக்குறைவாக காணப்படுகின்றனர். இதற்கு காரணம் இலகுவாக மீன்கள் கிடைத்தமை, முஸ்லீம், பறங்கியர் செல்வாக்கு, ஆகம வழிபாட்டு முறை வளர்ச்சியடையாமை எனப் பல காரணங்களைக் கூறக்கூடியதாக உள்ளது. இங்கு பூசணிக்காய், சுரக்காய், நாடங்காய், வத்தகைக்காய், வெள்ளரிக்காய், அவரைக்காய், புடலங்காய், பாகற்காய் முதலிய காய்கறிகளும், தற்காலத்தில் காய்கறிதோட்டங்கள் அதிகரித்தமையால் பலவகையான காய்கறிகள் (பயற்றங்காய், வெண்டிக்காய், கத்தரிக்காய், வாழைக்காய்) உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றுடன் மலைநாட்டில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற கரட், பீற்றூட், முள்ளங்கி, போஞ்சி, கறிமிளகாய், தக்காளி, கோவா போன்ற ஆங்கில மரக்கறிகளும் சமையலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் இளஞ் சமுதாயத்தினர் ஆங்கில மரக்கறிகளை விரும்பி உண்பதனையும் நாட்டு மரக்கறிகளையும் இலைக்கறிகளையும் புறந் தள்ளுவதனையும் காணக்கூடிதாக உள்ளது. அத்துடன் சில மக்கள் குழுமத்தினரிடம் மாமிசம் உண்பதனை உயர்வாகவும் காய்கறிகளை உண்பதனை தாழ்வாகவும் பார்க்கின்ற வேடிக்கை கலாசாரமும் காணப்படுவதனை மறுக்க முடியாது.

இப்பகுதியில் சமைக்கப்படும் உணவுகளின் சுவைக்கு ஆதாரமாக காணப்படுவது தேங்காய் ஆகும். தொன்று தொட்டு இங்கு தேங்காய் மக்களது சமையலுக்கு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இங்கு சமைக்கப்படும் சுண்டல், கடையல், பால்கறி, குழம்பு, சொதி, பால் ரசம் போன்ற கறிகள் தேங்காயை முதன்மையாகக் கொண்டு சமைக்கப்படுகின்றன. சுண்டல், கடையல், பிரட்டல், துவையல் என்பவற்றிற்கு தேங்காய்ப்பூத்துருவல் நேரடியாக பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய கறிகளுக்கு தேங்காய்ப்பால் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் சில கறிகள் சமைக்கும் போது தேங்காய் பாலில் அவிப்பதும் சில கறிகளில் இறுதியாக தேங்காய் பால் (தலைப்பால்) விட்டு கறியை அடுப்பில் இருந்து இறக்குவது மரபாகும். இங்கு கறிகள் சமைக்காத

போது தேங்காய் பாலை சேர்த்து உண்ணும் பழக்கமும் காணப்படுகின்றது. அதாவது காலை உணவில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்ட சோற்றில் தேங்காய்பால் சேர்த்து சாப்பிடுவர். மற்றும் இங்கு தேங்காய் பால் பொங்கல், தேங்காயில் செய்த சிற்றுண்டிகள் என தேங்காயை பயன்படுத்தி சமைக்கப்படுகின்ற உணவுகள் ஏராளமாகும்.

மட்டக்களப்பில் கடல், குளம், வாவி என்பன கொண்டு காணப்படுவதால் இங்கு மீன்கள் இலகுவாகவும் அதிகமாகவும் கிடைக்கின்றன. கடல்மீன்களாக சுறா, அறுக்குளா, தளப்பத்து, உலமியா, பாலைப்பாறை, ஒட்டி, கிளக்கன், விளல் என பலவகையான மீன்களும், குளத்து மீன்களாக கிளக்கன், திரளி,கெழுத்தி, ஒட்டி, ஒரா, கயல், செங்கணம், மணலை, செத்தல் போன்ற மீன்களும் சமையலுக்கு பயன்படுத்துவர். இந்துக்கள் செவ்வாய், வியாழன், வெள்ளி, ஆலயச் சடங்கு காலத்திலும், விரதநாட்களிலும், பௌர்ணமி தினங்களிலும், அசைவ உணவுகளை உண்ணமாட்டார்கள்.

மட்டக்களப்பு மக்கள் மாடுகளை அதிகமாக வளர்ப்பதனால் முஸ்லிம்கள், பறங்கியர் மாட்டு இறைச்சியினை உண்பர். அத்துடன் இந்துக்கள் கோழி, ஆடு, மான், மரை போன்ற இறைச்சிகளை உண்பர். முஸ்லிம்கள் தக்குபீர் செய்யப்பட்ட இறைச்சிகளை உண்பர். வீடுகளில் பாலும், தயிரும், கிடைக்கக்கூடிய அளவிற்கு மாடுகள் வளர்க்கப்படும். எருமைத்தயிர், எருமைப்பால், பசுப்பால், பசுத்தயிர் என்பனவும் மக்களால் விரும்பி சாப்பிடப்படுகின்றன. எருமைப்பால் ஆலயங்களில் பொங்கலுக்கு பயன்படுகின்றது. மற்றும் காலை உணவுடன் தயிரையும், பழஞ்சோற்றுடன் உண்பது பாரம்பரிய உணவுப்பழக்கமாகும்

இங்கு உணவு உண்டபின் தாம்பூலம் உண்ணும் வழக்கம் தொன்றுதொட்டு காணப்படுகின்றது. தாம்பூலம் என்பது வெற்றிலை, பாக்கு எனக் குறிப்பிடுவர். வயது வந்த ஆண், பெண் இருபாலாரும் இதனை உண்பர். இவர்கள் தேவைக்கேற்ப பாக்கு, வெற்றிலையுடன் புகையிலை, சுண்ணாம்பு, ஏலம், கறுவா, கராம்பு என்பவற்றையும் சேர்த்து உண்பர். இவ்வழக்கம் தற்காலத்திலும் வழக்கில் உள்ளது. மட்டக்களப்பு உணவுக் கலாசாரத்தை ஏ.பெரியதம்பிப்பிள்ளை பின்வருமாறு பாடுகிறார்.

“மோட்டெருமை வெண்தயிரும் முப்பழமும் கற்கண்டும்
போட்டினிய சீனிதேன் பொருந்து செந்நெல் வெண்சோற்றை
கூட்டியொன்றாயக் குழைத்ததனைக் குலக்குமரா தமைக்கூவி
கூட்டுணுவார் அமிர்தமெனக் குறைவில் செல்வமவர்க்கம்மா”

(பெரிய தம்பிப்பிள்ளை, *1982:12*)

தற்கால இளஞ்சமுதாயத்தினர் துரித உணவுகளையும், உறைப்பு உணவுகளையும் சுவையூட்டிகளால் தயாரிக்கப்பட்ட உணவகங்களின் உணவுகளை உண்பதிலும் அதிக ஆர்வம் காட்டுவதனையும், அதே நேரத்தில் கிராமங்களில் வாழுகின்ற மக்கள் பாரம்பரிய

உணவுப்பழக்கவழக்கங்களையும், வீட்டில் சமைக்கும் உணவுகளை உண்பதனையும் மரபாகக் கொண்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் மேலைத்தேய கலாசாரத்தின் ஈர்ப்பு, சமூக வலைத்தளங்கள், சமூக ஊடகங்களின் ஆதிக்கம், சினிமாவின் செல்வாக்கு, இளைஞர்களின் கவனம், புரிதல், இரசனைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற காரணங்களால் உணவுக்கலாசாரம், உணவு சமைத்தல், சமைக்கப்படும் உணவுகள் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வியாபார நோக்கில் உணவினை சமைக்கும் உணவகங்கள் துரிதமாக வளர்ந்து கொண்டு செல்கின்றன. இங்கு வாழ்கின்ற தமிழ் பேசுகின்ற முஸ்லீம் சமூகத்தினர் அதிகமாக தொழில் நிமிர்த்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று அங்கு காணப்படுகின்ற உணவு காலசாரம், பாரம்பரியங்களை கண்டு அவற்றை மட்டக்களப்பில் அறிமுகப்படுத்தி உணவகங்களை திறக்கின்றனர். அத்துடன் சிறிதளவு தமிழ் மக்களும் உணவகங்களை திறக்கின்றனர். இதனால் சுதேச ஆரோக்கியமான உணவுக் கலாசாரம், உணவு சமைத்தல் என்பன குறைந்து கொண்டு செல்கின்றன. அதே நேரத்தில் ஆரோக்கியமான உணவா? என்று பார்ப்பதனை விட சுவையான உணவா? என்று கேட்டு உண்கின்ற பழக்கம் எமது மக்கள் மத்தியில் பாரிய உணவு கலாசார சீர்கேட்டினை ஏற்படுத்தி வருகின்றன. சமூக ஊடகங்களில் ஆரோக்கிய வாழ்விற்குரிய விடயங்களை விட பொழுதுபோக்கிற்காக விடயங்களில் உணவுகளையும் உள்வாங்கி செயல்படுவதனால் இளஞ் சமூகத்தினரின் கவனம், ஈர்ப்பு, புரிதல், இரசனை என்பன மாற்றமடைந்து எமது காலநிலை, புவியியல் அமைப்பு என்பவற்றிற்கு ஏற்ற உணவுகளை உண்ணாது துரித உணவுகளை உண்டு சிறு வயதில் மரணம், பாரிய நோய்கள், உடல் உபாதைகள், சத்திர சிகிச்சைகள், மாரடைப்பு என்பவற்றிற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யுகங்கள் மாறினாலும் பழமையான உணவுக் கலாசார பழக்கவழக்கங்களை செழுமை மாறாமல் தற்கால இரசனைக்கு ஏற்ப கடைபிடிக்கும் போது காலங்கள் கடந்தும் எமது உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

**உசாத்துணை**


கந்தையா,வீ.சி. (1964). மட்டக்களப்புத் தமிழகம். ஈழகேசரிப்பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம். யாழ்ப்பாணம்.

சுதாசிவஐயர்,தி. (1940). மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு. தமிழாசிரியர் சங்கம். மட்டக்களப்பு.

தில்லைநாதன்,சா. (2017). மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

மகேஸ்வரலிங்கம். (2016). சுயம்பு (மட்டக்களப்பு மக்களின் உணவு ஒரு பொது நோக்கு). கலாசாரபேரவை. மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம். பட்டிப்பளை.

## மாணவர்களின் மொழித்திறன் விருத்திக்கு பாடசாலையும், குடும்பமும்

கலாநிதி. சந்துரு மரியதாஸ்
விரிவுரையாளர், கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இன்றைய நவீனத்துவமான உலகில் கல்வி மிகவும் இன்றியமையாத அம்சமாகக் காணப்படுகின்றது என்பதை அனைவரும் அறிவர். ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்நாட்டின் எழுத்தறிவிலும் சார்ந்துள்ளது. அந்தவகையில் ஒரு நாட்டில் ஒரு மனிதன் தனது சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் பெறுவதற்கான செயன்முறையே ''கல்வி'' எனக்கெள்வோம். இங்கு ''மாணவர்களின் இதயத்தினைத் தொடுவதன் மூலமே கல்வியை சரிவரக்கொடுக்க முடியும்'' என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். குழந்தையொன்று தாயின் கருவில் இருக்கும் போது கற்க ஆரம்பித்துவிடுகின்றது. பின்னர் பிறந்தது முதல் இறக்கும்வரை ஒரு மனிதன் கற்றுக்கொண்டிருக்கிறான் என்பது நடைமுறை. இவ்வாறாக கல்வியறிவு உடையவர் என எழுத வாசிக்கத் தெரிந்தவர்களே கணிக்கப்படுகின்றனர். கல்வியை ஒரு பிள்ளை தனது குடும்பத்திலும், தான் வாழும் சூழலிலும், கற்கும் பாடசாலையிலுமிருந்து பெற்றுக் கொள்கின்றது. அந்தவகையில் இவ்வாறு கல்வியைக் கற்கின்ற போது ஒருவரிடத்தில் மொழித்திறன் விருத்தி மேலும் உயர்வடைகின்றது. ஆனால் இம்மொழித்திறன் விருத்தியானது எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. ஒருவருக்கொருவர் வேறுபட்டே காணப்படும். இங்கு மொழித்திறன் விருத்தியாக எழுத்துத்திறன், வாசிப்புத்திறன், பேச்சுத்திறன், உச்சரிப்புத்திறன் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது.

ஒரு குழந்தையின் மொழித்திறனானது செவிமடுத்தலிலேயே ஆரம்பமாகின்றது. அந்தவகையில் செவிமடுத்தல் சிறப்பாக அமையும் போதுதான் ஏனைய திறன்களும் சிறப்பாக அமையும். இவ்வாறான செவிமடுத்தல் திறனை மாணவர்கள் தங்களிடம் விருத்தியாக்கிக் கொள்ளும்வகையில் வாசிக்கும் விடயங்களையோ, எழுதும் விடயங்களையோ மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கையாள வேண்டும். அதாவது யோகா பயிற்சிகள், மனதை ஒருமைப்படுத்தும் பயிற்சிகள், தியானம் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு விடயங்களை கிரகித்து ஞாபகப்படுத்தி தங்களின் கிரகித்தல் நிலை எவ்வாறு உள்ளது என்பதை அடிக்கடி பரீட்சித்துப் பார்ப்பதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர்கள் ஒவ்வொருவரிடம் எவ்வாறான கிரகிக்கும் ஆற்றல்கள் உள்ளன என்பதனை கண்டறிந்து கொள்ள முடியும். அந்தவகையில் ஒவ்வொரு மாணவரின் மொழித்திறன் விருத்தியில் அவர்களது குடும்பத்தின் செல்வாக்கினைக் காணலாம். இங்கு பெற்றோர், பெற்றோருடன் இணைந்து வாழும் உறவினர்கள் சமூகம் ஏற்கும் பண்பாட்டு மாதிரியொன்றை குடும்பம் எனலாம்.

மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் அவர்களினது குடும்பம் அதாவது மாணவர்களது பெற்றோர், குடும்ப அங்கத்தவர்கள், அவர்கள் வாழும் சூழல், குடும்பப் பின்னணி என்பன தாக்கம் செலுத்தும். இங்கு பெற்றோர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும். பிள்ளைகளின் கல்வி மீது அக்கறை கொள்ளாதவர்களாகவும் காணப்படுகின்றனர். மாணவர்களை ஓய்வு நேரங்களில் புத்தகங்களை வாசிக்க, ஆக்கங்களை எழுதத் தூண்டாது பெற்றோர் தொலைக்காட்சி பார்த்தல், வேறு வேலைகள் என்பவற்றில் ஈடுபடுகின்றபோது பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தி குறைவடைகின்றது. இதனால் இவர்களால் கல்வியை மேலும் விருத்தி செய்ய முடியாது உள்ளது.

அது போன்று குடும்பத்தில் உள்ள ஏனைய அங்கத்தவர்கள் மொழித்திறன் விருத்தி குறைவானவர்களாகக் காணப்படும் போது அவை பிள்ளைகளிலும் தாக்கம் புரியும். உதாரணமாக குடும்பத்தில் உள்ள ஒருவர் சரியான முறையில் உச்சரிக்காது தெளிவாகப் பேசாது இருக்கும்போது அவ்வாறே பிள்ளையும் பேச எத்தனிக்கும். அதேபோன்று ஒவ்வொரு சமூகத்திலும் பேச்சு உச்சரிப்புகள் வேறுபட்டுக் காணப்படும்போது அவ்வியல்புகளைக் கொண்ட பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும்போது பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அதாவது ஏனைய மாணவர்கள் தங்களை ஏளனம் செய்வார்களோ எனத்தாழ்வு மனப்பாங்குகொண்டு ஒதுங்கி நிற்கும் நிலை உருவாகின்றது.

இன்றைய சூழலில் பெற்றோர்கள் வெளிநாடு செல்லுதல், வறுமை காரணமாக பிள்ளைகளை வேலைக்கமர்த்துதல், சிறுவயதில் திருமணம் செய்து கொடுத்தல் போன்ற காரணிகளினாலும் மாணவர்களின் மொழித்திறன் விருத்தி பாதிக்கப்படுகின்றது. இங்கு பெற்றோர்களைப் பிரிகின்ற பிள்ளைகள் கற்றலில் ஆர்வம் காட்டாது சில சந்தர்ப்பங்களில் நெறிபிறள்வான நடத்தைளையும் வெளிக்காட்டுவர். பிள்ளைகள் வறுமை காரணமாக வேலைக்குச் செல்லும் போது அவர்களது கவனம் முழுக்க பணம் சம்பாதிப்பதில் காணப்படும். சிறுவயதில் திருமணம் செய்வதனால் தாம் மேலும் கற்க வேண்டும் என்ற சிந்தனையில்லாது கல்வியை ஏனோ தானோ என்று கற்பார்கள். இவ்வாறான எண்ணங்களைக் கொண்ட மாணவர்கள் சரியான முறையில் கல்வியை கற்காது ஒழுங்காக பாடசாலைக்கு வராது இடைவிலகல்களை மேற்கொள்கின்ற போது ஆசிரியர்களால் சிறப்பான முறையில் கல்வியை கற்பிக்க முடியாதுள்ளது.

இன்றைய சூழலில் மாணவர்கள் தங்களது அதிக நேரத்தை பிரத்தியேக வகுப்புக்களுக்காகச் செலவிடுகின்றனர். இதனால் இவர்கள் புத்தகங்களை வாசித்தல், ஆக்கங்களை எழுதுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் குறைவாக

உள்ளதனால் வகுப்பறைக் கற்றலில் புதிய ஆக்கங்களைப் படைக்கவோ புதிய விடயங்களை அறியவோ முடியாது சிரமப்படுகின்றனர். மற்றும் மாணவர்கள் தொலைக்காட்சியை அதிகம் பார்ப்பதனாலும், இணையத்தினை பாவிப்பதனாலும் வாசிக்கும் திறன், எழுதும் திறன் குறைவடைந்து செல்கின்றது. இத்தகைய நிலைமையானது வகுப்பறையில் ஒரு விடயத்தை கொடுத்து அவற்றினை ஆக்கமாக அமைக்கும்படி அவர்களிடம் கூறுகின்றபோது இடர்படுகின்றனர். மற்றும் பிள்ளையினுடைய கற்றலில் எவ்வளவு தூரம் பரம்பரை செல்வாக்குச் செலுத்துகின்றதோ அதேபோன்று சூழலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனை நிறுபிக்கவே ''வாட்சன்'' எனும் (நடத்தைவாதி) அறிஞர் என்னிடம் நூறு குழந்தைகளைத் தாருங்கள் அப்பிள்ளை எந்தப் பரம்பரையைச் சேர்ந்ததாக இருந்தாலும் பரவாயில்லை அப்பிள்ளையை நீங்கள் விரும்பும் பிரஜையாக வளர்த்துத் தருகின்றேன் என்றார். எனவே பிள்ளையின் கற்றலைத் தீர்மானிப்பதில் சூழலின் செல்வாக்கு இன்றியமையாதது. அதாவது ஒரு பிள்ளை வாழும் சூழலில் உள்ளவர்களின் பழக்கவழக்கங்கள் பிள்ளையிடத்தில் இலகுவில் ஒட்டிக்கொள்ளும். சில பிள்ளைகளின் பெற்றோர் படித்தவர்களாகவும் தொழில் அந்தஸ்து உள்ளவர்களாகவும் காணப்படுவார்கள். ஆனால் பிள்ளையின் பழக்கவழக்கங்கள் எதிர்மறையாகக் காணப்படும்.

இங்கு மாணவர்களின் சமவயதுக் குழுவினர் மொழித்திறன் விருத்தியில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக பிள்ளைகளிடத்தில் செல்வாக்குச் செலுத்துபவர்கள் ஆவர். ''பூவுடன் சேர்ந்து நாரும் மணக்கும்'' எனும் பழமொழிக்கு ஏற்ப நண்பர் குழாமின் நடத்தைப்பாங்குகள் பிள்ளைகளின் கற்றலில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இதனடிப்படையில் மாணவர்களின் மொழித்திறன் விருத்தியிலும் நண்பர் குழாமின் தாக்கத்தினைக் காணலாம். நண்பர்கள் சரியாக உச்சரிக்காது எழுத வாசிக்கச் சிரமப்படுகின்ற போது குறித்த மாணவரிடமும் இந்நிலையினைக் காணலாம். ஆகையால் மாணவர் ஒருவரின் மொழித்திறன் விருத்தியில் நண்பர் குழுவின் செல்வாக்கினைக் காணலாம். எனவே மொழித்திறன் விருத்திக் குறைபாடுகளையுடைய மாணவர்கள் கற்றலில் ஆயத்தமும் ஈடுபாடும் குன்றியவர்களாகவும் விருப்புக் குறைவானவர்களாகவும் காணப்படுவதனால் வகுப்பறை கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். பாடசாலைக்கு செல்லும் காலத்தில் வாசிப்புத் திறனை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்யுமென்று கூற முடியாது. எனவே ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாசிப்புத்திறனில் மாணவர்கள் அடையும் இடர்பாடுகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். அந்தவகையில் முதன்மை நிலைகளில் பல்வேறு வாசிப்பை முன்னேற்றுவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், மாணவர்களிடம் வாசிப்பு தொடர்பான மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளை முன்னெடுத்தல், வாசிப்புக்கு உதவக்கூடிய விளையாட்டுக்களை செயற்படுத்துதல்,

வாராந்தம் நூலகத்திற்கு அழைத்துச் செல்லுதல், வகுப்பறை மட்டத்தில் பத்திரிகை சஞ்சிகைகளை காட்சிப்படுத்துதல், பெற்றோர்களுக்கு வாசிப்புத் திறனை விருத்தி செய்யக்கூடிய ஆலோசனைகளை வழங்குதல், பழைய மாணவர்கள் சங்கமானது இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு விஷேட வகுப்புக்களை நடாத்துதல், வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் வகையில் ஒவ்வொரு வகுப்புக்கும் பொறுப்பாக ஆசிரியர்களை நியமித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது மாணவர்கள் தங்களது வாசிப்புத்திறனை மேலும் விருத்தி செய்து கொள்வார்கள்.

பரீட்சையை மையமாகக் கொண்ட எம்முடைய நாட்டின் கல்விக்கான கலைத்திட்டத்தின்படி மாணவர்களுக்கான மொழித்திறன் விருத்தியில்தான் சகலவிதமான எதிர்கால அடைவுகளும் தங்கியுள்ளது. எனவே உரிய காலகட்டத்தில் பிள்ளைகளின் மொழியாற்றலை உறுதிப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் வாழ்க்கைக்கு வித்திடுவோம்.



# Executive Committee Members of TAEU 2024-2025

1. Prof.M.Sugirtharan, President, TAEU
2. Mr. K. Ravichandran, Vice President, TAEU
3. Mr.S.Santharooban, Secretary, TAEU
4. Mr. V. Alagaratnam, Assistant Secretary, TAEU
5. Mr.M.N.Ravikumar, Treasurer, TAEU
6. Mrs.Gowry Luxmykanthan, Editor, TAEU
7. Prof.J. Kennedy, Immediate Past President, TAEU
8. Mr. G. Niroash, Representative of Faculty of Agriculture
9. Mr.V.Sasikaran, Representative of Faculty of Arts and Culture
10. Mr.S.Harishanthan, Representative of Faculty of Commerce and Management
11. Dr.V.Lokeesan, Representative of Faculty of Health-Care Sciences
12. Mr. T. Vinothraj, Representative of Faculty of Science
13. Dr.(Mrs).Vanitha Prasannath, Representative of Faculty of Technology
14. Mrs.L.Jegatheesparan, Representative of Library
15. Dr. (Mrs). P. Mathavan, Representative of Swami Vipulananda Institute of Aesthetic Studies
16. Mrs.P.Vithusia, Representative of Faculty of Applied Science
17. Dr.B.Sarangan, Representative of Faculty of Communication and Business studies
18. Dr.S.Ushakanthan, Representative of Faculty of Siddha Medicine
19. Mr.M.Ravi, Media Coordinator

# New members who joined TAEU during 2023-2024

**Faculty of Agriculture**

- Ms. R.Krishananthy, Dept. of Agriculture Chemistry

**Faculty of Applied Science**

- Mr.M.S.M. Farhan. Dept. of Physical Science
- Mr.R.Vinojan, Dept. of Physical Science

**Faculty of Arts and Culture**

- Dr.T.Megarajah, Dept. of Tamil Studies
- Dr.N.Pusparajah, Dept. of Social Sciences
- Mr.P.Suman, Dept. of Tamil Studies
- Mrs. D. Vithukshana, Dept. of Education & Child Care

# New members who joined TAEU during 2024-2025

**Faculty of Agriculture**

- Ms. S. Anula, Dept. of Crop Science
- Ms. S.Keethika, Dept. of Agriculture Biology
- Mrs. V.Liyinthan, Dept. of Animal Science

**Faculty of Arts and Culture**

- Prof K. Suresh, Dept. of Economics and Statistics

**Faculty of Commerce and Management**

- Mrs. S. Delima, Dept. of Management

**Faculty of Communication and Business Studies**

- Dr. L. Sooriyakumaran, Dept. of Business and Management Studies

**Faculty of Health-Care Sciences**

- K.M.T.D.Weerasekara, Dept. of Human Biology

**Faculty of Science**

- Ms. S. Thanusanth, Dept. of Zoology

**Faculty of Siddha Medicine**

- Ms. S. Dilakshi
- Dr. N. Harishanth
- Dr. S. Sasvatha
- Dr. M. Shankeerna
- Dr. (Mrs.) S. Sivatheepan
- Mr. V. Thanushiyan

**Faculty of Technology**

- Ms. P.Hisanithy, Dept. of Biosystem Technology

# Happy Retirement

**(2023-2025)**

***wishing you good health, good luck and great success in your retairment.....***



**Dr. M.M. Mahusoon**
**Retd. Senior Lecturer Gr I in Animal Science**
**Faculty of Agriculture**



**Dr. Shanthi Kesavan**
**Retd. Professor in Hindu Civilization**
**Faculty of Arts & Culture**

# Some clicks -TAEU Activities 2024-2025








*TAEU is a Trade Union registered under the Trade union ordinance no 14 of 1935 with Department of Labour and a member of Federation of University Teachers' Association (FUTA). The TAEU stands as a Trade Union principally for the right of its membership as the collective voice of the member academic staff and the 'voice of the voiceless' to make University a place with transparency and good governance where Academics have a dignified existence to serve the students, university, community and country at large, free from undue influences and pressures. TAEU represent the Academic membership of the University to communicate and act on their behalf for the benefit, dignity and rights of individuals, community or university as appropriate.*

ISSN 2950-6786
9 772950 678004